Registered as a News Paper பக்கங்கள் 08 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 26 ( 08 - 05 - 1992 ) வெள்ளிக்கிழமை ஓசை: 80

## சீமெந்து தொழிற்சாலை மக்கள் மயமாக்கப்படும்

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தை மக்கள் மயப்படுத்தும் திட்டத்தின் கீழ் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையையும் மக்கள் மயமாக்குவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மக்கள் மயப்படுத்தும் திட்டத்திற்கிணங்க புலுமுல்ல குழு அறிக்கையின் பிரகாரம் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர், சுய விருப்பத்தின் (8 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய இலங்கை உறவில் கசப்பு

# பிரேமாவின் பேச்சால் சிக்கல்

(கொழும்பு)

**விடுதலைப் புலிகள் சம்பந்தமாகவும் இந்திய அமைதிப் படை சம்பந்தமாகவும் அண்மைக்காலத்தில் ஜனாதிபதி பிரேமதாசா வெளியிட்ட கருத்துக்கள் இந்திய அரசுக்கு ஆத்திரத்தை மூட்டியுள்ளது. இதனால் இந்திய இலங்கை உறவில் மீண்டும் முரண்பாடுகள் தலை தூக்கியுள்ளன.**

அண்மையில் ஜனாதிபதி பிரேமதாசா இரத்தினபுரியில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும் போது சிறிலங்கா உள்நாட்டு விவகாரத்தில் இந்தியா தலையிட முயற்சிப்பதைக் கண்டித்தார். விடுதலைப்புலிகள் பிரச்சினைபற்றி குறிப்பிட்டஅவர்:

இவ்விவகாரம் அண்ணன் தம்பிக்கு மத்தியிலான பிணக்கு என்றும், இதில் அயலார் தலையிடுவது அவசியமில்லை என்றும் எடுத்துரைத்தார். இக்கூற்றை இந்தியப் பத்திரிகை உலகம் பிரமாகப்படுத்தி செய்திகளை வெளியிட்டன. இந்திய அரசியல் வட்டாரங்களிலும் இந்த அறிக்கை அதிருப்தியையும் சர்ச்சையையும் ஏற்படுத்தியது.

இது இவ்வாறிருக்க அம்பாந்தோட்டையில் நடைபெற்ற இன்னுமொரு கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி பிரேமதாசா இந்திய அமைதிப் படையை ஒரு ஆக்கிரமிப்புப் படையெனச் சாடியிருந்தார் இந்தக் கூற்று இந்திய அரசியல் வட்டாரங்களில் ஆத்திரத்தை மூட்டியது. இதனைத் தொடர்ந்து இந்திய அரசு (8 ஆம் பக்கம் பார்க்க)

## 70 பொலிஸை காணவில்லை

வடக்கு - கிழக்கு பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றிய பொலிசாரில் மொத் [8 ஆம் பக்கம் பார்க்க]

## பாவனைக்குதவாத உணவு காங்கேசன்ஊடாக வருகிறது

### செயலக அதிகாரி கருத்து

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறைமுகத்தினூடாக எடுத்துவரப்படும் உலர் உணவுப் பொருள்கள் பாவனைக்குதவாதவை என யாழ். செயலக உயர் அதிகாரிகள் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மேற்படி துறைமுகத்தில் உள்ள களஞ்சியத்தில் ஏற்கனவே களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்ட உணவுப் பொருள்களையே லொறிகள் மூலம் எடுத்து வரப்படுவதாக கூறப்படுகிறது. நீண்ட நாட்களாக களஞ்சியத்தில் தேங்கிக் கிடந்தமையால் இவ் உணவுப் பொருள்கள் பழுதடைந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை இவ்வாறான பழுதடைந்த உணவுப் பொருள்களைத் தவிர்த்து தரமான உணவுப்பொருள்களைத் தருவிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்குசெயலக அதிகாரிகள் தற்பொழுது முயற்சி எடுத்து வருகின்றனர்.

## புலிகளின் தலைவர்களை இந்தியா கோரவில்லை

### - பிரட்மன்

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக, விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனையும் பொட்டு அம்மானையும் ஒப்படைக்கும்படி இந்தியா இதுவரைகோரவில்லையென ஜனாதிபதியின் சர்வதேசவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

அவர்களை ஒப்படைக்கும்படி கோரப்பட்டால் உள்நாட்டு சட்டங்களுக்கு உட்பட்டு கோரிக்கை பரிசிலிக்கப்படும் என மேலும் அவர் தெரிவித்தார்.

## முஸ்லிம் ஊர்காவற்படையின் மிருகத்தன வெறியாட்டம்

முத்துக்கல, கரப் பொல தமிழ்க் கிராமங்களிற்குள் துப்பாக்கிகள், வாள், கத்தி, இரும்புக்கம்பிகள், கிறிஸ் கத்திகள் சகிதம் புகுந்த அழிஞ்சிபத்தானை முஸ்லிம் ஊர்காவல் படையினர் அங்கு பல பெண்களைக் கொடூரமா கொலை செய்ததுடன் 50 ற்கு மேற்பட்ட வீடுகளை எரிந்து சாம்பலாக்கி ஆலயங்களை எரித்து அங்கிருந்த நகைகளையும் கொள்ளையடித்தனர் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன கடந்த மாதம் 29 ஆம் திகதி இச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது 139 குடும்பங்கள் வாழ்ந்த முத்துக்கல தமிழ் கிராமத்தில் தமது காட்டுமிராண்டித்தனத்தை கட்டவிழ்த்து விட்டன முஸ்லிம் ஊர்காவல் படையினர் கரப் பொல கிராமத்தில் பிரதான வீதியாலும், அம்மன் கோவிலடியாலும், கல்லுமலைப் பாதையாலும் உட்புகுந்து (8 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்திற்கு எதிராக சிங்களவர்கள் கோஷம்

(வவுனியா)

வவுனியா நகரில் சிறிலங்கா இராணுவ அதிகாரிகளுக்கு எதிராகச் சிங்கள மக்கள் கோஷம் எழுப்பியுள்ளனர்.

இறந்த இராணுவத்தின் சடலங்களை ஏன் மீட்டெடுக்கவில்லை என்று கேட்டு சிங்கள மக்கள் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராகக் கோஷித்துள்ளனர்.

5 ஆம்திகதி வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த இராணுவத்தின் சடலங்களைப்பார்வையிட்ட பின்னரே இந்தக் கோஷம் எழுப்பப்பட்டதாம்.

அத்துடன் இறந்த இராணுவத்தின் பெற்றோர்கள் வடபகுதியில் இருந்து தென்பகுதி நோக்கிச் சென்ற பொது மக் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கந்த சம்பவங்கள்; விசாரணைக் குழு நியமனம்

வெலிக்கந்த பகுதியிலுள்ள அழிஞ்சிப்பத்தன கிராமத்தில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து விசாரணை நடாத்த விசாரணைக்குழு ஒன்றை சிறிலங்கா ஜனாதிபதி நியமித்துள்ளார்.

நீதியரசர் ஏ. ஜே. ஹேரத் தலைமையிலான இந்தக் குழுவில் மேஜர் ஜெனரல் பாலரட்ணராஜா, பொலிஸ் அத்தியட்சகர் அப்துல் மஜீத் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இக் குழுவினர் விசாரணை முடிவினை சில தினங்களில் அறிவிப்பர் என சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

## இராணுவச் சடலம் செஞ்சிலு. பொறுப்பேற்பு

(வவுனியா)

விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்ட இராணுவத்தின் சடலம் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வாகனம் மூலம் விடுதலைப் புலிகளினால் இராணுவத்திடம் ஒப்படைக்கப் பட்டது.

வவுனியா இராணுவ அதிகாரிகளினால் சுமார் பத்துத் தடவைகள் குறிப்பிட்ட சடலத்தை ஒப்படைக்கும் படி கேட்கப்பட்டதாம்.

பயணிகள், அரச ஊழியர்கள், பாதிரிமார் ஆகியோர் மூலம் விடுதலைப் புலிகளிடம் செய்திசொல்லப்பட்டபின்னர் 5 ஆம் திகதி மாலை குறிப்பிட்ட சடலம் ஒப்படைக்கப் பட்டது.

## மட்டக்களப்பில்

## புலிகளின் தாக்குதலுக்கு 3 ராணுவம் பலி; 7பேர்காயம்

மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடியிலிருந்து தொப்பிக்கல நோக்கி சென்றுகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் மூன்று இராணுவத்தினர் பலியாகினர் ஏழுஇராணுவத்தினர் படுகாயமடைந்தனர் படுகாயமடைந்தவர்களில் ஒருவர் இராணுவ அதிகாரி.

இதேவேளை வேறோர் இடத்தில் இடம்பெற்ற கண்ணிவெடி தாக்குதலில் ஒரு ராணுவம் பலியாகியது இத்தகவலை கேர்ணல் முனசிங்க வெளியிட்டுள்ளார்.

## நீர்கொழும்பில் கார் திருத்த யாழ். நிபுணர்களாம்

(கொழும்பு)

நீர்கொழும்பில் சுமார் பத்து வருட காலமாக உபயோகிக்கப்படாமல் இருந்த பழைய மொரிஸ் ஒக்ஸ்போட் கார் ஒன்றைத் திருத்துவதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து மூன்று மெக்கானிக் மார்கள் கொண்டு வரப்பட்டது குறித்து சிறிலங்கா பொலிசார் திகைப்படைந்துள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளது.

நீர் கொழும்பு பொலிஸ் பிரிவில் கைது செய்யப்பட்ட பதினேழு சந்தேக நபர்களோடு இந்த மூன்று பேரும் கைது செய்யப்பட்டனர் என்றும், நீர்கொழும்பில் கைதேர்ந்த மெக்கானிக்குகள் இருக்கையில் யாழ்ப்பாணத்திலிருந்து எதற்காக மூன்று மெக்கானிக் [8 ஆம் பக்கம் பார்க்க]

## தாயகம் வந்த அகதிகளுக்கு அடிப்படைவசதி கூட இல்லை

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் தாண்டிக்குளம், வேப்பங்குளம் முகாம்களில் தங்கவைக்கப் பட்டிருக்கும் இந்தியா விலிருந்து திரும்பிய தமிழ் அகதிகள் திருப்திகரமான அடிப்படை வசதிகள் இன்றி பரிதாப நிலையில் உள்ளனர்.

இம் மக்களுக்கு வழங்கப் படும் வாராந்த உலர் உணவு விநியோகத்தின் போது பாவனைக்குதவாத உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருவதாக கூறப்படுகிறது. அதுவும்வெளிச் சந்தையில் குறைந்த விலையில் நல்லரக (8 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை சுற்றிவளைப்பு; இரண்டு பொதுமக்கள் கைது

[திருக்கோணமலை]

திருகோணமலை மாவட்டத்தில் நான்கு தமிழ்க் கிராமங்களை சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் இரண்டு அப்பாவிப் பொது மக்களைக் கைது செய்துள்ளனர்.

கடந்த மாதம் முப்பதாம் திகதி மல்லிகைத்தீவு, பட்டித்திடல், மணல்சேனை, பெருவெளி ஆகிய கிராமங்களை சுற்றிவளைத்து பொன்னையா துரைநாயகம் (வயது40, மல்லிகைத்தீவு.) விலஸ்ரன் அருளம் [8 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### புளியம் விதை தேவை

நாற்று மேடைக்குப் புளியம் விதை தேவை. மில்க்வைற் யாழ்ப்பாணம். (சி-4374)

### A/L இரசாயனம்

புவிவளம் ஆரம்பம் 9-5-92 சனி 2.30 P.M வினாவிடை ஆரம்பம் 9-5-92 சனி 3.15PM ஆசிரியர் சதீஸ் 108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். A/L 94 செறிவு ஆரம்பம் 9-5-92 சனி 6.30AM. (2547)

### பயிற்சி வகுப்புகள்

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களே! உங்கள் பதவிகளை நிரந்தரமாக்கும் பரீட்சை சம்பந்தமாக 9-5-1992 சனி காலை பத்து மணிக்கு ஸ்ரான்லி வீதியில் உள்ள பொண்ட் கல்வி நிலையத்தில் ஒன்று கூடும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

V. A. சிவராசா (2550)

### உதிரம்

தனர். இந்தப் பகுதியை முற்றிலும் சோதனைபோடவேணும் என்று சொல்லிக் கொண்ட காந்தன் .. நிலமட்டத்திற்கு ஒருசில அடிகீழே நீர் நிறைந்திருந்த கிணறு ஒன்றைக் கண்டான். விரைந்து சென்றுகிணற்றை எட்டிப்பார்த்ததும் 'அக்கா' என வாய்விட்டுக் கதறினான் அவன்;

கிணற்றிலிருந்து சடலத்தை மீட்டெடுத்தபோது அக்கா அணிந்திருந்த சேலை முழுவதும் ரத்தக்கறை படிந்திருந்தாலும் மேல்சட்டையோடுசேர்த்துக் குத்தப்பட்டிருந்த ஊசி அப்படியே இருந்தது. வலது நெஞ்சுக்கூட்டுக்குஊடாககீழே வயிற்றுப் புறமாக் குண்டுகள் துளைத்துச் சென்றிருந்தாலும் சேலையில் இருந்த கிளிப்புகள் அனைத்தும் பவுத்திரமாக இருந்தன. காந்தனுக்கு ஒருவித் திருப்தி ஏற்பட்டது' மறுகணமே என்ன என்னவிடயத்திற்கு திருப்திபடுறது எண்டில்லாமல் ...—சீநான் என்ன மனிசன் என்று தன் மீதேஒருகோபமும் எரிச்சலும் வந்தது அவனுக்கு.

சாக்குகள்இரண்டைஎடுத்து உடனடியாகத் தயாரித்தஒரு ஸ்டெச்சரில் அக்காவை- இல்லைசடலத்தைதூக்கிகொண்டு தமது இருப்பிடப்பகுதியை நோக்கி நடந்தனர்,

ஊரின் எல்லைப்புறத்திற்கு வந்துவிட்ட, வேணு அண்ணை ஐயோ ஜமுனா கை நிலத்தில முட்டுது என்று கத்திய குரல் காந்தனையும், பிரசாதினையும் திடுக்குறச்செய்தது. வேணு அண்ணைக் மட்டுமல்ல அங்கிருந்த அனைவரும் தங்களுள் ஒருவரை இழந்துவிட்டதாகவே எண்ணினர். அனைவரது விழிகளும் கோபத்தால் சிவந்தன. எனினும் வேணு அண்ணையின் கண்களில்சொரிந்ததுகண்ணீராக அல்ல உதிரமாகவே தெரிந்தது பிரசாத்திற்கு.

## O/L 92

மாதாந்தப் பயிற்சி பரீட்சைகளுடன்

பிரிவு II

★ DAY CLASS

★ EVENING CLASS

ஆரம்பம்: 09. 5. 92

BOND INSTITUTES

யாழ்ப்பாணம்

(சி/4380)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட் - யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம்வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L** SAT - SUN CLASSES

(காலை 8.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை)

2 ஆம் தவணை பாடத்திட்டம்

ஆரம்பம் : 09 - 05 - 1992

- எமது தனித்துவம்வாய்ந்த வழமையான ஆசிரியர் குழு
- அலகு ரீதியான மீட்டல் வினா - விடை வகுப்புகள் இலவசம். (சி/4371)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



கந்தசாமி விஜயகுமார்

(யா/ டிறிபேக் கல்லூரி மாணவன்)

மலர்வு: 1. 6. 1973 — திதி: 8. 5. 92 — உதிர்வு: 1. 5. 1990

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி<br>விட்டுச் சென்ற மகனே<br>உன் ஆத்மா சாந்தியடைய<br>பிரார்த்திக்கின்றோம்

பெற்றோர்,<br>வை. கந்தசாமி

டச்சு றோட்,<br>சாவகச்சேரி.

(2336)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 21 — 04 — 1918



விண்ணில் 21 — 04 — 1991

சின்னப்பு முத்துக்குமாரு

திதி: 8.5.1992

பாசமிகு எங்கள் தந்தையே!<br>அன்பாலும் பண்பாலும் எம்மை வளர்த்திரே<br>ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறாது எம்துயர்<br>ஓராண்டல்ல ஓராயிரம் ஆண்டு சென்றாலும்<br>எமது துயர் தீர்க்க தினமும் பூஜிப்போம்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய<br>இறைவனை வேண்டி நிற்கும்<br>மனைவி, பிள்ளைகள்

மட்டுவில் தெற்கு,<br>சாவகச்சேரி.

(சி/4372)

## அறிவித்தல்

கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம் லங்கா சீமெந்து நிறுவனக் கிளையின் விசேட பொதுச்சபைக் கூட்டம்.

**இடம்:** லங்கா சீமெந்து நிறுவன தற்காலிகக் காரியாலயம், சுன்னாகம்.

**காலம்:** (09-05-92) சனிக்கிழமை

**நேரம்:** காலை 9.30 மணியளவில்

விசேட பொதுச்சபை கூடவிருப்பதால் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும்படி அறியத் தருகின்றேன்.

-பதில் காரியதரிசி

(2551)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

A/L கலை, வர்த்தகம்

**94** பிரிவு - 2<br>ஆரம்பம்: 09-05-92

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | — | திரு. சுப்பிரமணியம் |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்துநாகரிகம்) இந்துசமயம் ) | — | திரு காரை சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு. குணராசா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறிதரன் |

சி/4377

## நினைவு கூருகின்றோம்...

### 1992-05-08

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய -

**ரகுமான்**

**யூலின்**

**ரகீம்**

1987 ஆம் ஆண்டு மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**சுதா** (ஐ. சுதாகரன் - வந்தாறுமூலை, மட்டக்களப்பு.)

**தம்பி** (இ; தவராசா -வந்தாறுமூலை, மட்டக்களப்பு.)

மட்டக்களப்பு தளவாய்ப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**நடா** (சந்திரன் - களுவங்கேணி, மட்டக்களப்பு.)

1989 ஆம் ஆண்டு தெல்லிப்பளையில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ஜனா** (யோகசுந்தரம் ஐங்கரன் - அலுக்கை, அளவெட்டி,)

புங்குடுதீவில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர் -

**கந்தவேள்**

1991 ஆம் ஆண்டு வவுனியா கோழியாகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் ரவி** (பாலசிங்கம் ஜெயக்குமார் பொற்பதி கொக்குவில் கிழக்கு.)

ஆகியோரை இந்நாளில்<br>நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்<br>மக்கள் முன்னணி**

(சி/4378)




தமிழகத்தில் அமைந்துள்ள புலிகளின் 6-வது பயிற்சிப் பாசறையில் ஒரு நாள்- ''சாப்பிட வாட்டாம்! சாப்பிட வரட்டாம்!'' என்று சொல்லிக் கொண்டே வந்தான் மாஸ்டர். தனித்தனியாக அமைக்கப்பட்டிருந்த கொட்டில்கள் ஒவ்வொன்றையும் எட்டிப் பார்த்துச் சொன்னபடியே சென்று கொண்டிருந்தான். அங்குதான் பயிற்சிக்கென வந்த போராளிகள் அனைவரும் தங்கியிருந்தனர். வழக்கத்தில் மணியோசை மூலமே சாப்பிட வருமாறு அழைப்பார்கள். இன்று மணியின் வேலையை மாஸ்டர் செய்கிறானே என்று எண்ணாலும் எல்லோரும் அவரவர் சாப்பாட்டுக்கோப்பையை எடுத்தபடி வரிசையாக நிற்கத் தொடங்கினர். மாஸ்ரருக்கும் மனதிற்குள் சிரிப்பு- உலோவாயும்தான் பேய்க்காட்டி விட்டதாக.

அந்த முகாமிற்கு சமைப்பதற்கென சென்ற போராளிகளுக்கு ஆச்சரியமாக இருந்தது. நாங்கள் மணியோசையை எழுப்பவில்லையே? ஏன் இவர்கள் வரிசையாக நிற்கின்றார்கள்? பொன்னம்மான் இதைப் பார்த்துக் கொண்டிருந்தார். இது மாஸ்ரரின் வேலைதான் என்று தெரிந்து விட்டது. எல்லோரையும் அப்படியே நிற்கச் சொல்லிவிட்டு 'இன்னும் சாப்பாடு தயாராகவில்லை' என்று ஒவ்வொருவராக கூப்பிட்டுச் சொல் என்று கட்டளை பிறப்பித்து விட்டார். அந்த முகாமில் மொத்தம் 329 பேர். தன்னைத் தவிர்த்து மிகுதி 328 பேருக்கும் தனித்தனியாகச் சொல்ல வேண்டிய நிலைமை -ஆரம்பத்தில் இதைச் சொல்வது சுவாரஸ்யமாகத் தான் இருந்தது. எனினும் போகப் போக சொல்ல முடியாதபடி களைத்து விட்டான். இறுதிக் கட்டத்தில் அழுகையே வரும் நிலைமை ஏற்பட்டது அவனுக்கு. இப்படியான ஒரு கலகலப்பான போராளியாகத் தான் தன்னை இனங்காட்டிக் கொண்டான் மாஸ்ரர். அந்த முகாமில் இடம்பெற்ற கலை நிகழ்ச்சி ஒன்றில் இவன் நீக்ரோ போல வேடமிட்டு ஆடியதும் இலகுவில் பயிற்சியெடுத்த போராளிகளால் மறக்கப்பட முடியாத சம்பவங்களாகும்.

நடுத்தரக் குடும்பத்தை விட சற்று வசதியான குடும்பம். 1977 -ம் ஆண்டு வரை இவன் கொழும்பிலேயே கல்வி கற்றான். அக்கால கட்டத்தில் கொழும்பிலிருந்து புறப்பட்ட அகதிக் கப்பல்கள் ஏனையோரைப் போலவே இவனுக்கும் சொந்த மண்ணை இனங்காட்டின. கப்பலில் வந்தோரில் அனேகர் தாம் அகதியென்ற நினைப்புடன் வந்தனர். பத்து வயது சிறுவனாக இருந்த இவனோ போராளியாவதற்குரிய விதையை நெஞ்சில் சுமந்தவனாக வந்து சேர்ந்தான்.

1983-ம் ஆண்டுக் கலவரத்தைத் தொடர்ந்து போராளி மைனவாதத்தின் அழைப்புகள் எங்கும் நிறைந்து காணப்பட்டன. சம்மதமென்றால் உடனே அடுத்த வண்டியில் (படகு) அனுப்பத்தயாராக பல இயக்கங்கள். ஆனாலும், இவன் வடமராட்சி மண்ணில் போராளிகளை உள்வாங்கும் புலிகள் அமைப்பிலேயே இணைந்து கொள்ள விரும்பினான். கப்டன் லாலா ரஞ்சன், லெப். சுந்தன், சொக்கன் போன்ற போராளிகளுடன் இணைந்து செயற்பட்டான். பகுதி நேர உறுப்பினராக இவன் செயற்பட்டு வீட்டு வீடு திரும்பும் ஒவ்வொரு நாளும் இவனது பெயரை சொல்லி ஒவ்வொரு தும்புக்கட்டைமுறியும். அந்தச் சந்தர்ப்பங்களில் இவன் தான் அகதியாக வந்ததை நினைத்துக் கொள்வான். அந்த நிலை தனது குடும்பத்தினருக்கும் தனது இனத்திற்கும் ஏற்படக் கூடாது என்பதற்காக அதனைத் தாங்கிக் கொண்டான். வீட்டில் விழும் அடிகள் முழு நேர உறுப்பினராகத் தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு இயக்கத்தினரை நச்சரிக்கவைக்கும். எனினும், இவனை மேலும் சோதித்துப் பார்க்க விரும்பிய அவர்கள் இவனை மாதக் கணக்காக ஒரு வீட்டில் தனியறையில் விட்டு மறைவாக இருந்து கொள் என்று சொன்னார்கள். இவன் பொறுமையிழந்து போராளியாகிறானா என்று பார்க்கவே இந்த ஏற்பாடு. இவனது வீட்டிலிருந்து அரை மைல் தூரத்திலேயே இவன் தங்க வைக்கப்பட்டிருந்தும், இவன் பொறுமையிழந்து செல்லவில்லை. எனவே பயிற்சிக்கு அனுப்பப்பட்டான்.

பயிற்சி முடிந்ததும் இவன் மருத்துவப் பயிற்சி பெறும்குழுவில் சேர்க்கப்பட்டான். 1984 ஆம் ஆண்டு இயக்கத்தில் சேர்ந்த இவன் 87ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்படும் வரை தமிழகத்திலேயே தங்கியிருந்தான். போர்க்களத்தில் நிற்பதே இவனுக்குப் பிரியமானது. எனினும் அக்காலகட்டத்தில் இவனுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை. போரில் காயமடைந்து வரும் போராளிகளை இவன் பராமரிக்கும் முறை - இவனது தேவையை மருத்துவக் குழுவிற்கு உணர்த்தியது. அதனால் இவன் தமிழகத்திலேயே தங்கியிருக்க நேர்ந்தது. அக்காலகட்டத்தில் மிக முக்கியமான அறுவைச் சிகிச்சைகளுக்கு இவனே உதவியாளனாக அழைக்கப்பட்டான். சத்திரசிகிச்சை நிபுணர்கள் இவனது ஆர்வத்தையும் கடமையுணர்வையும் மெச்சினர்.



கப்டன் மாஸ்டர்

இவன் குழந்தைகளில் மிகவும் பிரியமானவன். குழந்தைகள் தன்னில் பிரியமாக இருக்குமாறும் நடந்து கொள்வான். இவனது மருத்துவ மனையைச் சூழ இருந்த குழந்தைகள் தான் இவனது மருமக்கள் - நண்பர்கள் - உறவினர்கள். அதனால் தான் இன்று மாஸ்ரர் என்ற பெயரைச் சொன்னாலே கண் கலங்குகின்றனர். அப்பகுதி மக்கள்.

எப்படியோ தாய் மண்ணை மிதிக்க பாக்கியம் கிடைத்தது. எனினும் இந்தியப் படையினரின் போக்கு மாஸ்ரர் மீண்டும் தமிழகத்தில் தங்கியிருக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. இந்தியப் படையினருடனான போரில் காயமடைந்தவர்கள் மாஸ்ரரின் பராமரிப்பினால் சுகமடைந்தனர். அக்காலத்தில் மேலதிக சிகிச்சைக்காக ஒரு போராளியை வேறோரிடத்துக்குக் கொண்டு செல்ல வேண்டியிருந்தால் மதுரையிலும், சென்னையிலும் கைது செய்யப்பட்டவர்களில் இவன் அடங்கவில்லை. பின்னர் இவன் தமிழகத்திலிருந்து வன்னிக் காடுகளை நோக்கிச் சென்றான்.

மிகவும் நெருக்கடியான காலகட்டம். மிகவும் பாரிய காயங்களென்றாலும் தமிழகத்துக்குக் கொண்டு செல்ல முடியாது. எனினும், அந்தக் குறையை பெருமளவு நிவர்த்தி செய்தவன் இவனே. மதுரையில் இவன் அக்கறையுடன் பழகிய மருத்துவப் பயிற்சி போராளிகளுக்குப் பெரிதும் பயன்பட்டது. தானாகவே முயற்சியெடுத்து இவன் செய்யும் சிகிச்சைகள் நீண்டகால அனுபவம் மிக்க மருத்துவர்களையே மூக்கில் விரல் வைக்க வைத்தது. நாளடைவில் மருத்துவக் குழுவினர்க்கு பயிற்சியளிப்பவனாகவும் மாறினான். விடுதலை உணர்வோடு அவர்களை உருவாக்குவது - மருத்துவக் குழுவிலுள்ளோரின் பொறுப்புக்

(6ஆம் பக்கம் பார்க்க)

# அசுத்தமான சூழ்நிலையும் சுகாதார பாதிப்புகளும்

அசுத்தமானஉணவு, குடிநீர் என்பனவற்றை உட்கொள்வதால், வயிற்றோட்டம் ஏற்பட்டு ஒருவயதிற்கு உட்பட்ட குழந்தைகளும் மேற்பட்ட சிறுவர்களுமாக ஒவ்வொரு வருடமும் ஏறக்குறைய நாற்பது இலட்சம் குழந்தைகள் உலகில் இறக்கிறார்கள்.

நுளம்புக்கடியினால் பரவும் 'மலேரியா' என்கிற நோயினால் வருடந்தோறும் இருபது இலட்சம் மக்கள் இறக்கிறார்கள். மேலும் 27 கோடி மக்கள்மலேரியா நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். வயிற்றின் உணவுக்கால்வாயில் பரவும் 'பூச்சிகளினால்' நூறு இலட்சம் மக்களுக்கு மேல் நோய்வாய்ப்படுகிறார்கள்.

மேலும் அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடைந்து கொண்டிருக்கும் நாடுகளில் வளிமண்டலத்தையும் சூழ்நிலையையும் மாசுபடுத்துகிற உயிரின, இரசாயன வாயுக்களால் குறிப்பாக சிகரெட், சுருட்டு, பீடி போன்ற புகைத்தலால், வருடந்தோறும் நூறு இலட்சம் பேருக்கு மேல் இருமல், மாரடைப்பு மற்றும் நோய் போன்றவற்றால் நோய்வாய்ப்படுகிறார்கள். வாகன- வீதிவிபத்துக்களால் மாத்திரம் ஐந்து இலட்சம் பேர் வருடந்தோறும் உலகம் முழுவதும்இறக்கிறார்கள். அத்துடன் பல நூறு இலட்சக்கணக்கானோர் வாகன - வீதி விபத்துக்களால் காயமடைகிறார்கள். அங்கவீனமடைகிறார்கள். மேற்கண்ட மனித ஆரோக்கியம் சுகாதாரம் சம்பந்தப்பட்டபிரச்சினைகளை ''சூழ்நிலையும் ஆரோக்கியமும்'', அதாவது மனிதகுலத்தினுடைய ஆரோக்கியத்தையும் சுகாதாரத்தை சூழ்நிலை எவ்வாறு பாதிக்கிறதென்பதை கண்டறிவதற்காக உலக சுகாதார நிறுவனத்தின் செயலாளர் நாயகத்தினால் 1990 ஆம் ஆண்டின் முற்பகுதியில் நியமிக்கப்பட்ட22பேரைக் கொண்ட குழுவின் இறுதி அறிக்கையிலேயே இப்புள்ளி விபரங்களுடனான பிரச்சினைகள் கண்டறியப்பட்டுள்ளது. ஐரோப்பிய பாராளுமன்றத்தின் முன்னாள் தலைவியான திருமதி சைமன் வெயில் தலைமையிலான இக்குழுவில் இந்தோனேசியாவின் சனத்தொகை-சூழ்நிலை அமைச்சரான டாக்டர் சலிம் (முன்னாள்) சோவியத்யூனியனின் மருத்துவ விஞ்ஞான கழகத்தைச் சேர்ந்தபேராசிரியர் இஸ்மரோவ் ஆகியோர் உட்பட உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 22 பேர் அங்கம் வகித்தனர்.

## மருத்துவம்

### பிரச்சினைகளுக்குக் காரணம்

மனிதகுலம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு உலகிலுள்ள சுத்தமான நீர், காற்று மற்றும் இயற்கை வளங்களில் தங்கியுள்ளது. அதிகரித்துவரும் உலக சனத்தொகை அவற்றின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மேலதிகமாகப் பாவிக்கப்படும் உலகத்தின் இயற்கை வளங்கள் மற்றும் மனிதர்களாலும்வாகனங்களாலும் தொழிற்சாலைகளினாலும் பெருமளவில் வெளிவிடப்படும் கழிவுப்பொருட்கள் என்பன இயற்கையை மாசுபடச் செய்கின்றன. இதனால் மனிதனின் ஆரோக்கியம் எதிர்காலத்தில் பெரும் நெருக்கடிக்குள்ளாக்கப் போவதாக உலக சுகாதார நிறுவனம் தன் அறிக்கையில் பெரும் அச்சம் தெரிவித்துள்ளது.

### சனத்தொகை

கடந்த நூறு வருடங்களில் அதாவது 1800 ஆம் ஆண்டிலிருந்து 1900ஆம் ஆண்டிற்கிடைப்பட்ட பகுதியில் உலக சனத்தொகை ஐந்து மடங்காகஅதிகரித்து 500 கோடியை எட்டியுள்ளது. இது தொடர்ந்தும் அதிகரித்து 2020ஆம் ஆண்டளவில் உலகின் மொத்த சனத்தொகை 800 கோடியை எட்டுமென கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. அதுவும் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் சனத்தொகை அதிகரிப்பு வளர்ச்சியடைந்துவிட்ட நாடுகளை விட அதிகளவில் அதிகரிப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது பயன்படுத்தப்படும் இயற்கை வளங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. குறிப்பாக நகரங்களில் அதிகரித்து வரும் சனத்தொகையின் அன்றாட தேவைகளான சுத்தமானகுடிநீர், தரமான உணவு வகைகள், தங்குமிடவசதி என்பவற்றை வழங்குவதில் அதிகாரிகள் திண்டாடுகிறார்கள். மேலும் மனிதர்களாலும், வாகனங்களாலும், தொழிற்சாலைகளாலும் வெளிவிடப்படும் கழிவுப் பொருட்களும் மனித ஆரோக்கியத்திற்கு பெரும் இடையூறுகளை விளைவிக்கின்றன.

### வறுமை

1985ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட உலகளாவிய கணிப்பொன்றின்படி 115 கோடி மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வதாகவும், அதிலும் 63 கோடிமக்கள் வரை கடுமையான வறுமையின் கீழ் வாழ்வதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. வருடாந்த வருமானத்தைக்கொண்டே இம் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் வாழ்க்கைத்தரத்தை அடிப்படையான மதிப்பீடாக எடுக்கும் பட்சத்தில் இத்தொகை இன்னும் அதிகமெனக்கருதப்படுகிறது. அதாவது இவ்வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களிடையே தான் எழுத்தறிவோ - படிப்பறிவோ இல்லாதவர்கள் சுத்தமான குடிநீரைப் பெற முடியாதவர்கள் புறச்சூழ்நிலைகளில் தூண்டப்படும் தொற்றுவியாதிகளுக்குள்ளாகுபவர்கள், உடல் வன்முறைக்குள்ளாகுபவர்கள் என்பன அதிகரித்துக் காணப்படுகிறதாம். அதனால் இவர்களுடைய சுகாதார வாழ்வும் தேகாரோக்கியமும் மேலும் பாதிப்பிற்குள்ளாகிறது. இவர்களுடைய சராசரியான வாழ்க்கைச்சக்கரம் 60 வயதைத்தாண்டுவதில்லையாம். மேலும் போதுமானளவு உணவு கிடைக்காமை, சுத்தமான குடிநீர் கிடையாமை, அசுத்தமான வாழ்க்கை, வசதியற்ற இருப்பிட வசதி, கல்வி வசதியின்மை, சுகாதார வசதியின்மை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது வறுமைக்கோட்டில் வாழ்பவர்களின் எண்ணிக்கை 200 கோடியாக அதாவது உலகசனத்தொகையின் 40 சதவீதமென கண்டறியப்பட்டுள்ளது. இவற்றில் பெண்களும் குழந்தைகளுமே பெரும்பான்மையானவர்களாம். ஏனெனில் அனேகமாக பெண்களே வீட்டுத்தலைவியாகவும் வீட்டுப்பிரச்சினையை சமாளிப்பவர்களாகவும்நோயினால் பீடிக்கப்பட்டவர்களை பரா

மாறன்

மரிப்பதிலும், அசுத்தமான சூழ்நிலை, குடிநீர் என்பவற்றாலும் அதிகளவில் பாதிப்புக்குள்ளாவதாலும் இவர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகிறார்கள்.

### ஆலோசனைகள்

ஒவ்வொரு குடிமகனும் போதியளவு சத்துணவும் குடிநீரும் அதனைப் பெறுவதற்குரிய அடிப்படை வருமானத்தைப் பெறக்கூடியதாக நாடுகள் தமது திட்டத்தை வகுக்க வேண்டும். உணவு உற்பத்தியை அதிகரிப்பதோடு மண்வளம், நன்னீர் வளம் போன்றவற்றைக் கவனமாகப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# உதிரம் சொரியும் விழிகள்

**சிறுகதை**

'கொம்மைக்கு குடுக்கப் போறான் டோய்—' சுரேசனின் இரைச்சல் அந்த வயல்வெளிப் பரப்பெங்கும் பரவியது.

'எடேய், அக்கா வெளிக்கிடுற நேரமாப்பாத்து ஏன்டா உப்பிடிக் கத்துறாய்' என்றான் பிரசாத் உரத்த தொனியில்.

அக்கா இனியும் தாமதித்தால்... மட்டக்களப்பு நகரிலுள்ள உங்கள் வீட்டிற்குப் போய்ச் சேருவது சிரமமாகிவிடும் என்பதைச் சூசகமாகத் தெரிவிக்க இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு விட்டதாக அவனுக்குள் ஒரு நினைப்பு.

ஊர்க் குடிமனைகளின் ஒதுக்குப்புறமாக - காட்டுக்கரையோரமாக அமைந்திருந்த அக்குடிசையின் பின்புறமிருந்த ஒரு மாமரத்தின் நிழலில் சாவகாசமாகக் கதைத்துக்கொண்டிருந்த வேணு அண்ணையும், ஜமுனாக்காவும் தமது உரையாடலை நிறுத்தி மௌனமாகினர்.

காலை பத்து மணியளவில் அக்கா வந்து சேர்ந்தது முதல் நண்பகலைத் தாண்டும் இந்த நிமிடம் வரையில் தனிமையில் பேசிக் கொண்டிருந்த வேணு அண்ணையை நோக்கி 'நான் போட்டு வரட்டுமே' என்று ஜமுனா கேட்டபோதே அவளின் குரல் தளதளத்தது.

'ஓமோம்— இனிக் கிளம்பினால்தான் செங்கலடி வரையும் நடந்து போய் அங்கால பஸ் எடுத்து ரவுணுக்குப் பொழுதுசாய முன்னம் போய் சேரலாம். பிள்ளையளும் பாத்துக்கொண்டிருக்கும்...' என்று கூறிய வேணு அண்ணை நிமிர்ந்த போது ஜமுனாக்காவின் கண்ணிலிருந்து சொரிந்த நீர் காலடி மண்ணைச்சேறாக்கிக் கொண்டிருந்தது.

'ஜமுனா... என்ன இதுகுழந்தையள் மாதிரி நீர் இருக்கிறீர் எண்ட மன ஆறுதலில தானே நான் இங்க இருக்கிறன் நீரே உப்பிடியெண்டா குழந்தையளை ஆர் தேற்றுறது' எனச்சொல்லிக்கொண்ட போதே அவருக்கும் குரல் தளதளத்தது.

இந்த உரையாடலுக்குச் செவி மடுத்த பிரசாத் 'ஏனக்கா... இண்டைக்குஒருபொழுது இங்க இருந்திட்டு நாளைப் பொழுதுக்குமட்டக்களப்புக்கு போகலாம் தானே. நாளைக்கு ஞாயிற்றுக்கிழமைதானே. உங்களுக்கு 'பாங்க்'கும் இருக்காது தானே, என்று கேட்டான்.

'நாளைக்கு வேலையில்லைத் தான் தம்பி... ஆனால் அபராஜிதாவும், பிரவீணாவும் படிக்கிற 'நேர்சரியில' பெற்றோர் தினம் வைக்கினமாம். அதுக்கு கட்டாயம் போகத் தானே வேணும். இவரும் போகேலாது. நானெண்டாலும் போகாட்டால் பிள்ளையள் அனாதையள் மாதிரியெல்லே போயிடும்' ஜமுனாக்கா பதிலளித்தாள்.

'ஜமுனா... நீர் போட்டு வாரும்.. பிள்ளையளையும் கவனமாய் பார்த்துக் கொள்ளும்... அப்பா பக்கத்தில் இல்லையெண்ட குறை அதுகளுக்குத் தெரியாமல் வளக்கிறது உம்மட பொறுப்பு' எனக் கூறிய வேணு அண்ணை ஜமுனாக்காவை வழியனுப்பி வைத்தார்.

★ ★ ★

ஊர்மனைகளைக் கடந்து சன சஞ்சாரமற்ற - பற்றைக் காடுகள் மலிந்த - பாதைகள் வழியாக கால்நடையாகப் பயணித்துக்கொண்டு இருந்தனர். காந்தன் ஒரு பதினைந்து யார் தொலைவில் முன்னுக்குப் போய் கொண்டிருந்தான். அவன் காட்டிய பாதை வழியில் பிரசாத்தும், ஜமுனாக்காவும் சென்று கொண்டிருந்தனர். அவர்களுக்குப் பின்னால் சிறிது தூரம் தள்ளி சுரேனும் வந்து கொண்டிருந்தான்.

ஒரே சீரான வேகத்தில் சுமார் இரண்டு மணிநேரம் நடந்து சென்ற பின்னர் காந்தன் ஓரிடத்தில் தரித்தான். இவர்கள் அண்மித்ததும் 'இனித் தார் றோட்டில கொஞ்சத் தூரம் போக வேணும். எதுக்கும் நான் முதல் போய் 'றெக்கி' பாத்திட்டு வாறன். இங்கன இருந்துகொள்ளுங்கோ' என்று கூறிவிட்டு முன் சென்றான்.

அங்கும், இங்கும் சுற்றிப் பார்த்துக் கொண்டு நான்கு பக்கங்களிலும் கண்களைச் சுழல விட்டுக் கொண்டிருந்தான் பிரசாத். அடர்த்தியான மௌனம் போர்த்தியிருந்தது போல ஒரு சூழல். 'சுரேன்... தண்ணிக்கான் கொண்டு வந்தனியா' என்றான் பிரசாத். 'ஓமண்ணை ஆனா திரும்பிப் போகும் வரையும் வேணும். இன்னும் கொஞ்சத்தில் நீங்கள் ஊருக்க போயிடுவீங்கள் தானே' சுரேன் பதிலளித்தான் தண்ணிக் கானை எடுத்து நீட்டியபடி.

'இதுல தெரியற இடிஞ்ச கட்டிடம்தானே — பழைய ஜி. பி. எஸ்' என்றாள் ஜமுனா. 'இடிஞ்ச கட்டிடம் இல்லையக்கா. நாங்கள் இடிச்ச கட்டிடம்— இல்லாட்டா இப்ப இதுலயும் ஆமிதான் இருக்கும்' எனக்கூறினான் சுரேன்.

இந்த வேளையில் பற்றையொன்றுக்குள் கிடந்த பவுடர் பேணி ஒன்றைக் கண்ட பிரசாத் எதேச்சையாக எழுந்து சென்று அதை எடுத்தான். 'ஆரோ விழுத்திப் போட்டு போயிருக்கினமாக்கும் எண்டு பாத்தா அதுக்க ஒரு சொட்டும் இல்லை' எனத் தனக்குத் தானே பிரசாத் கூறிக்கொண்டதும் கலகலத்துச் சிரித்த சுரேன் 'அவருக்கு இப்ப பவுடர்தான் தேவைப்படுதாக்கும்' என்றான் விஷமம் எதுவுமில்லாமல்.

''ஏன்டாப்பா நான் பவுடர் போடக் கூடாதோ'' எனப் பிரசாத் கேட்கவும் ''இதெல்லாம் தேவையற்ற ஆடம்பரங்கள்'' என நிதானமாகப் பதிலளித்தான் சுரேன்.

சுரேனின் பதில் கேட்டு அவனுக்குள் உறைந்திருக்கும்கோபத்தை அளவெடுத்துக் கொண்ட ஜமுனா ''அடுத்த முறை வரேக்கை பிள்ளைக்கு என்ன வாங்கிக் கொண்டு வாறது'' என்றாள் அன்பொழுக.

''அடுத்த முறை நீங்கள் வரும் வரைக்கும் நாங்கள் இருப்பம் எண்டு எப்பிடிச் சொல்லுறது. நான் சொல்லிவிட்டு நீங்கள் வாங்கிக் கொண்டந்து தற்சமயம் நான் இல்லையெண்டா பிறகு எவ்வளவு கவலை வரும் உங்களுக்கு. இதெல்லாம் வீண்தானே. இங்க எங்களுக்கு அவசியமான தேவைக்கு எல்லாம் இருக்கு. இருக்கிறதைப் பங்கிட்டுச் சமாளிக்கிறம்'' என்றான் பக்குவமாக.

இதனிடையில் அந்தப் பவுடர்ப் பேணியிலிருந்த லேபலைக் கிழித்தெடுத்த பிரசாத் அதிலிருந்த 'P' என்ற எழுத்தை மட்டும் வேறாக்கி

**இனியவன்**

னான். இதை மட்டும் ஏன் கிழிச்சு எடுக்கிறீர் என ஜமுனாக்கா கேட்கவும் அதனை அவவிடமே கொடுத்து ''பிரசாத்திற்கு பவுடர் வேணும்'' என்பதற்கு ஞாபகார்த்தமாக இது இருக்கட்டும் எனக் கூறினான். அவளும் அதனைத் தனது கைப்பைக்குள் போட்டுக் கொள்ளவும், காந்தன் வாருங்கோ போகலாம் எனக் கூறவும் சரியாக இருந்தது.

★ ★ ★

தார் வீதியில் இரண்டு முதியவர்கள் நின்று கொண்டிருந்தனர். ''செல்லக்கண்டு அண்ணை, அக்காவைச் செங்கல்லடியில் பஸ் ஏத்தி விடுங்கோ. நீங்கள் வந்து வியளம் சொன்ன பிறகுதான் நாங்கள் இங்க இருந்து போவம்'' எனக் கூறினான்.

''ஓமோம்......அது செய்யலாம்...அப்ப நாங்கள் வரட்டுமோ'' எனக் கேட்டார் செல்லக்கண்டு.

'எடேய் நீ......பிரசாத்தெல்லே......எங்கமிச்ச நாளாய்க் காணயில்ல'' என்றார் கூட நின்ற போடியாரப்பு.

''இங்கதான் இருக்கிறன் ..'' எனக் கூறிய பிரசாத் 'மறந்து போயிருப்பியள் எண்டெல்லே நினைச்சன்'' என்றான்.

''நீதான் எங்களை மறந்து 'துண்டு' கொடுத்திட்டாய் எண்டா நாங்களும் அப்பிடியோ'' எனப் போடியாரப்பு கேட்கவும், என்ன பதிலைக் கூறுவது எனத் தெரியாமல் திகைத்தான் பிரசாத். 'அப்ப தான் போட்டு வாறன். கவனமாய் இருங்கோ அவரிட்டயும் சொல்லுங்கோ' கூறியபடி ஜமுனாக்கா நடக்கத் தொடங்கினாள்.

★ ★ ★

'இந்த ஜமுனாக்கா பாவம்டா' என்றான் காந்தன். ஜமுனாக்கா மட்டும்தானோ பாவம் மற்றவையள் எல்லாம் புண்ணியம் ஆக்கும்' இண்டலடித்தான் பிரசாத்.

'ஒருத்தரின்ரை ஆழ அகலம் தெரியாமல் உப்பிடிக் கதையாதையடா' எனக் காந்தன் உரக்கவும், 'நீங்கள் சொன்னாத்தானே கதைப்பற்றி மற்ற வைக்கும் தெரியவரும் எனப் பிரசாத் பதிலிறுத்தான்.

அது சரிதான் எனத் தனக்குள் எண்ணிக் கொண்டவனாக காந்தன் பழைய நினைவுகளில் மூழ்கி முத்தெடுத்து பிரசாத்துடன் பகிர்ந்து கொண்டார்.

ஜமுனாக்காவிட முறை மச்சினன்... ஒருவர் இருந்தவரி. அவருக்கும் இவவுக்கும் தான் சம்பந்தம் செய்யிறதெண்டு கூறை கூட விரிச்சிருந்தவையள். ஆனா அவர்கொழும்பில போய் 'லோ' படிச்சாப் பிறகு இவவை வேண்டாமெண்டு சொல்லிப் போட்டாராம். அதால தான் கலியாணம் கட்டின பிறகு தன்ரை புருசனும் 'லோ' படிச்சுப் பாஸ் பண்ண வேணும் எண்டு அக்கா பாடாத பாடு எல்லாம் பட்டவவாம். உண்மையைச் சொன்னா என்ன வேணு அண்ணை சட்டத்தரணியாக இருக்கிறதே அக்காவால தானே எனக்கூறிநிறுத்தினான் காந்தன்.

'ஆ... அப்படியோ...' என் ஒரு வியப்புக் குறியோடு காந்தனை நோக்கினான் பிரசாத்.

'அது மட்டுமில்லையடா... வேணு அண்ணை 'கோப்பறெட்டிவ்வில' செய்த வேலையை விட்டுப்போட்டு கொழும்புக்குப் போய் படிக்க... அக்கா இந்த 'பாங்க்' வேலைக்கு போய் தான்டா தன்ரை செலவையும் பாத்து வேணு அண்ணைக்கும்காசுஅனுப்பிப் படிப்பிச்சவவாம் இதைவேணு அண்ணையே எத்தனைதரம் நினைச்சு நினைச்சு சொல்லியிருப்பார் தெரியுமே' காந்தனின் சொற்கள் செவிப்பறைக்குள் இறங்க பிரசாத்தின் விழிகள் ஆச்சரியத்தோடு மின்னின

'வேணு அண்ணை இப்ப பேருக்கு சட்டத்தரணிதான். ஆனால் அதை வைச்சு மற்றவை மாதிரி உருளி புரளி பண்ணி காசு உழைக்காமை இங்க எங்களோடை இருக்கிறதை நினைக்க...... அவவோட இருக்கிற நாங்கள் பெருமைப்படலாம் போல' என்று பிரசாத்தின் உதடுகள் அசையவும் காந்தன் இடைமறித்தான். 'அண்ணை கலியாணம்கட்டி குடும்பம் எண்டு சீவிச்ச காலத்தை விரல்விட்டு எண்ணலாம் எண்டுதான் நினைக்கிறன்' என்றான் அவன். 'ஏன் அண்ணை' 'ஏனோ... கலியாணம் கட்டின சில மாதத்திலேயே கொழும்புக்கு லோ படிக்கப் போனார். அது முடிச்சு மட்டக்களப்புக்கு வந்து கொஞ்ச நாளிலேயே அவருக்கு இங்க இருக்கேலாமல் பிரச்சினையள் வரத்தொடங்கியிட்டுது. அதோடை தலைமறைவாகினார். பிறகு இந்தியன் ஆமி வந்தாப்போல குடும்பத்தோடை இருப்பம் எண்டு வர அவங்களும் அவரைப் பிடிச்சுக் கொண்டு அடைச்சு வைச்சானுகள். அவனுகள் போகேக்கை தானே அண்ணனை றிலீஸ் பண்ணினவனுகள். என்று கூறிவிட்டுத் திரும்பினான்.

'அவங்கள் போய் கொஞ்ச நாளில பிறகு சண்டை தொடங்கிச்சு அதுக்குப் பிறகு அவர் எங்களோடை தானே இருக்கிறார்' எனக்கூறி நிறுத்தினான் பிரசாத். 'அபர்ணா பிறந்த போது அண்ணை தலைமறைவு சுகிர்தன் பிறந்தபோது அண்ணை இந்தியன் ஆமியின்ரை சிறைக்குள்ளே' எப்பிடியிருக்கும் யோசிச்சுப் பார். ஜமுனாக்கா பாவம் தான். காலம் தான் எவ்வளவு வேகமாய் போகுது...அபர்ணாவும், சுகிர்தனும் இப்ப நேர்சரிக்குப் போகினமாம் எனக் காந்தன் கூறினான்.

அப்போது மிகத் தொலைவில் கறுத்தப் பாலத்திற்கு சமீபமாகத்தான் இருக்க வேணும் வெடிச் சத்தங்கள் பட்...... பட்''' படபடபடவென சரமாரியாகக் கேட்டது. காந்தனும் பிரசாத்தும் திகைத்துப் போய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

'அடேய்... அங்க பாரடா... பிரசாத்... ஆரோ ஓடிவருமாப் போல'' காந்தன் கூறினான்.

★ ★ ★

தனது துப்பாக்கியை சரிசெய்தபடி குறிவைக்க ஆயத்தமானதொரு நிலையில் காந்தன் தூரத்தே தெரிந்த மனித உருவத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு சில கணப்பொழுதுகளிலேயே ஓடி வருவது செல்லக்கண்டு அண்ணை தான் என்பதை ஊகித்துக் கொண்டவனாக 'செல்லக்கண்டு அண்ணை' என்று உதடுகள் அசையவும் கால்களில் வேகம் எடுத்தது பிரசாத்திற்கு காந்தன் தன்னிடமிருந்த 'வாக்கிடோக்கியை இயக்கி 'றேமன்... றேமன் ...' என்று அழைத்தான்.

'றேமன்ஹியர்' என்ற குரல் கேட்டதும் 'கில்மன்ஹியர்' என்று கூறிவிட்டு அடுத்த ஒலி அலைக்காக காத்திருந்தான் காந்தன்.

தூரத்தில் ஓடிவந்து கொண்டிருப்பது செல்லக்கண்டு அண்ணைதான் என்பதை அவன் கண்கள் உறுதிப்படுத்திய அக்கணத்தில் அவர் நிலைதடுமாறி நிலத்தில் உருண்டார். அதற்கிடையில் பிரசாத்தும் அவருக்கு சமீபமாக சென்று விட்டான்.

'என்ன அண்ணை? என்ன நடந்தது? அக்கா எங்க? பிரசாத்தின் குரல் தளதளத்தது

'வெடி கொளுவிப் போட்டுதடா தம்பி' என்று தொடங்கிய செல்லக்கண்டு அண்ணைமேலும் தொடர்ந்தார்.

''கறுத்தப் பாலத்தடியில் நிக்கிற ஆமி சுடுறான். போடியாரப்பு வெடிபட்டு... ஓடிப் போய் பார் பிள்ளை ஜமுனா தனிய...'' என்றுசொற்களை உதிர்க்கவும் அவரது விழிகள் மூடி... மயக்கமடையலானார்.

அணிந்திருந்த சேர்ட்டின் ஒரு பகுதியைக் கிழித்து முழங்கைக்கும் தோற்பட்டைக்கும் இடையே பெருகிக் கொண்டிருந்த ரத்தத்தைக் கட்டுப்படுத்த ஒருகட்டுப் போட்ட பின் .. அருகிலிருந்த குட்டையொன்றில் இருந்து இரு கைகளிலும் நீரை ஏந்தி வந்து அவரது முகத்தில் தெளித்தான்.

இதனிடையில் காந்தனும் அவ்விடத்திற்கு வந்து விட்டான் இருவருமாக செல்லக்கண்டு அண்ணையைத் தூக்கிக்கொண்டு ஊர்ப்புறத்திற்கு வந்து சேரவும் ஊர்ச்சனங்களும் ஆதரவாளர்களுமாகபலர் கூடிவிட்டனர். அவர்களதுபொறுப்பில் செல்லக்கண்டுவைஒப்படைத்தனர்அப்போதுசாடையாக கண்விழித்த செல்லக்கண்டு 'பிள்ளைக்கும்வெடிகொளுவி... தூக்கிக்கொண்டு பேங்கோ எண்டுகத்தினது .. தூக்கிறதுக்கு குனிஞ்சபோது தான் எனக்கும்வெடிபட்டுது .. என அரற்றிக் கொண்டிருந்தார்.

★ ★ ★

இண்டைக்கு மூண்டுநாளாய்ப் போச்சு... அவளின்ரை ஒருசதைத் துண்டுஎண்டாலும்எடுத்துக் கொண்டு வாங்கோ...அதுக்காவது நான் இறுதி அஞ்சலி செலுத்த வேணும் '' வேணு அண்ணை கூறியபோது இரத்தம் அப்படியே உறைந்து விடுவதுபோல சோகம் நெஞ்சை பிழிந்தது.

இப்ப நாங்கள் போறம்அண்ணை.. தேடிப்பார்த்துக் கொண்டுவாறம் ... நீங்கள் இருங்கோ அண்ணை'' பிரசாத்தின் குரல் கம்மியது

வெடிப்பட்டிருந்தாலும் சில வேளை அவமட்டக்களப்புக்கு போயிருப்பா. இல்லாட்டிலும் ஆற்றையும்வீட்டிலையும்தங்கி நிற்பா ... எல்லார்த்தையும் யோசிச்சு கவனமா பார்த்து வாங்கோ' என்றார் விம்மலுக்கிடையேயே. பிறகும் என்ன நினைத்தாரோ தெரியாது அவளுக்குஒண்டும் நடந்திராது

(7ஆம் பக்கம் பார்க்க)

## வீடும் நாடும் விழிப்பும்

எழுந்து கொள்க
என்னருந் தோழா!
தூக்கம் இன்னொரு
சாக்காடு —
எனது வார்த்தையெனில்
ஏற்க மாட்டாய்;
ஏளனஞ் செய்வாய்!
ஆதலினால்
வள்ளுவன் வாக்கினைச்
சொல்லி வைக்கிறேன்;
''தூக்கம் இன்னொரு
சாக்காடு!''

நட்ட நடுநிசியில்
நாய்கள் குரைத்தால் —
முற்றத்து வேம்பின் -
கிளையொன்று
காற்றிலே துவண்டு
ஓட்டிலே இடித்தால்
துணுக்குற்று விழித்து —
திருடனோ என்று
திகிலுடன் எழுந்து—...

வீட்டினைக் காப்பதில்
விழிப்பினைக் காட்டு —
ஆனாலும் —
நாட்டினைக் காப்பதில்
இன்னும் ஏன் இல்லை?
நாய்களின் குரைப்பில்
கிளையின் இடிப்பில்
சிலிர்த்தெழ வைக்கிற
சிந்தனை பொதிந்ததெனில் -
விமானங்கள் வருகையில்
துணுக்குறல்
இன்னும் ஏன் இல்லை?
எறிகணை வெடிப்பினில்
திகில்தரல்
இன்னும் ஏன் இல்லை?
உன்னிடம் கொள்முதலாய்
தோல்விகள் அவைக்கேன்?
நாடு போனபின்
வீடுதான் ஏது?

தட்டு மட்டுமே
பறிபோவதாய் எண்ணமா?
பிட்டு உன்னுடன்
எஞ்சுதல் திண்ணமா?

எழுந்து கொள்க
என்னருந் தோழா!
தெருவினில் இறங்கி
புழுதியில் தொட்டு
நெற்றியில் நீறிடுக!

- மையோன்

> என்னுடைய ஜனங்களே!
> அழிந்துபோன மற்ற கூட்டத்தவர்களின்
> கெட்ட நாட்களைப் போன்றவை உங்கள்
> மீது வந்து விடுமென்று நிச்சயமாக
> நான் பயப்படுகிறேன்.
>
> திருக்குர் ஆன் 40 : 30

# முஸ்லிம்களின் எதிர்காலம் நிச்சயமற்றதாக மாறுகிறது

**- நிலாந்தன்**

கடந்த மாதம் 19 ஆம் திகதியன்று வாழைச்சேனையிலுள்ள மீராவோடையில் இரு தமிழ்இளைஞர்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் ஒருவர் உயிருடன் புதைத்துக் கொல்லப்பட்டதாக பிரேதபரிசோதனைகள் தெரிவித்தன. இதன் பின்னர் பொலநறுவ மாவட்டத்தில் வெலிகந்தைக்கு அருகிலிருந்த முஸ்லிம் கிராமம் ஒன்று ஆயுத பாணிகளால் தாக்கப்பட்டது. இதில் 60 முஸ்லிம்கள் கொலையுண்டனர். 38 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து வெலிகந்தைக்கு அருகிலிருந்த தமிழ்க் கிராமங்கள் ஆயுத பாணிகளால் தாக்கப்பட்டன. இதில் 70 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொலையுண்டனர். பலர் காயமடைந்தனர்.

இவ்வாறாக, இன்றுகிழக்கு, இனங்களுக்கிடையிலான பழிவாங்கற்களமாக மாறியுள்ளது. அங்கிருந்து வரும் எந்த ஒரு தமிழரிடமும் அங்குள்ள நிலைமைகளைப் பற்றி விசாரித்தால் அவர் உணர்ச்சி வசப்படுகிறார். கிழக்கில் முஸ்லிம் ஆயுத பாணிகள் இலங்கை இராணுவத்தை விடப் பொல்லாதவர்கள் என்று நிருபிக்க முயல்கிறார். அங்குதமிழர்கள் இலங்கை இராணுவத்திடமிருந்தும் தப்பவேண்டியுள்ளது. முஸ்லிம் ஆயுத பாணிகளிடமிருந்தும் தப்பவேண்டியுள்ளது. இரவுகளில் பெண்கள் கவர்ந்து செல்லப்படுகிறார்கள் தமிழர்கள் கிராமங்களைக் கைவிட்டு தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ காடுகளில் ஒளித்திருக்க நேரிடுகிறது ......... என்றெல்லாம் அவர் சொல்கிறார்.

முஸ்லிம்களும் அங்கு தங்களிற்குப் பாதுகாப்பில்லை என்கிறார்கள். இராணுவத்தின் நிழலில் நிரந்தரமாகப் பதுங்க வேண்டியநிலை. நகரங்களுக்கு வெளியில் அவர்கள் வயல்களுக்குப் போகவோ கடலிற்குப் போகவோ முடிவதில்லை. இராணுவத்தால் அரணிடப்பட்ட நகரங்களினுள்ளும் வாகனக்குண்டுகள் வெடிக்கின்றன. துப்பாக்கிகளற்ற பாதுகாப்பான இரவை அவர்களால் கற்பனை செய்யவே முடியாதுள்ளது.

கிழக்கில் இன்று உருவாகியுள்ள புதிய நிலைமைகளை இரண்டாவது ஈழப்போரின் விளைவென்று பலரும் கருதுகிறார்கள். ஆனால் அங்கு முஸ்லிம்களுக்கும் தமிழருக்கும் இடையிலான நம்பிக்கையீனங்கள் அல்லது முறுகல் நிலை என்பது மிக நீண்டகாலமாக அதாவது இரண்டாவது ஈழப் போரிற்கும் முன்பிருந்தே, இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கும் முன்பிருந்தே நிலவி வருகிறது என்பதே உண்மை.

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் கிழக்கில் தீவிரமடைந்தபோது பல முஸ்லிம் இளைஞர்கள் அதில் இணைந்து கொண்டார்கள். பலர் வீர வணக்கங்களிற்கு உரியவர்களாக இறந்தும் உள்ளார்கள். ஆனால் இராணுவத்தின் பழிவாங்கல் என்று வரும்போது முஸ்லிம்கள் தங்களுடைய முஸ்லிம் என்ற அடையாளம் காரணமாக ஒருவகையான பாதுகாப்பை அனுபவித்தார்கள். இந்தப் பாதுகாப்பை இழந்துவிட விரும்பாத முஸ்லிம்கள் அநேகமாக தமிழ் இயக்கங்களோடு உறவற்ற நிலையைப் பேணவே விரும்பினார்கள். 80 களின் நடுக்கூறில் இலங்கை அரசால் உருவாக்கப்பட்ட ஜிகாத் இயக்கம் வரும் வரை முஸ்லிம்களிற்கும் தமிழ் இயக்கங்களிற்கும் இடையிலான உறவு பெரும்பாலும் விரோதமில்லை என்பதாக இருந்தது. கிழக்கில் தமிழ் இயக்கங்களை முறியடிப்பது என்றால் முதலில் முஸ்லிம்களையும், தமிழர்களையும் இணையவிடக் கூடாது என்ற தந்திரத்தின் அடிப்படையிலேயே ஜிகாத் உருவாக்கப்பட்டது. ஜிகாத்தின் வருகையோடு இரு சமூகங்களிற்கும் இடையிலான உறவுகள் மோசமடையலாயின. ஜிகாத்தும் அதன் அநுதாபிகளும் முஸ்லிம் சமூகத்துள் தமிழ் இயக்கங்களின் ஊடுருவலை எதிர்த்தார்கள். உதிரிச் சம்பவங்களாக பழிவாங்கல்கள் நிகழ்ந்தன. ஏற்கனவே இரு சமூகங்களிற்கும் இடையிலிருந்து வந்த சந்தேகங்கள் கூர்மையடையலாயின. ஒரு கட்டத்தில் இரு சமூகங்களிற்கும் இடையில் கலவரங்கள் வெடித்தன. இவற்றுக்கெல்லாம் பின்னணியில் இலங்கை இராணுவம் நின்றபடியால் இக் கலவரங்களில் தாங்களே அதிகம் பாதிக்கப்பட்டதாகத் தமிழர்கள் கூறுகிறார்கள். ஆனால் அன்றிருந்த நிலைமைகள் இன்றிருப்பதைப் போல பயங்கரமான பழிவாங்கல்களாக இருக்கவில்லை.

85, 86, 87 ஆம் ஆண்டுகளில் கலவரங்கள் நிகழ்ந்தன. இதில் 87 இல் நிகழ்ந்த மோசமான கலவரம் இந்தியப் படையின் வருகையோடு நிகழ்ந்தது. இந்தியப்படை தமிழர்களின் தாயகத்துள் நுழையும் போது தன்னை தமிழ் மக்களின் மீட்புப் படையாகத்தான் தோற்றம் காட்டியது. வடக்கில் விபறேஷன் ஒபறேஷனிலிருந்து தமிழர்களை மீட்ட படையாகவும், கிழக்கில் தமிழர்களை அச்சுறுத்திய சிங்களக் குடியேற்றவாதிகளிற்கு எதிராக முன்பு தமிழர்களைத் தாக்கிய முஸ்லிம்களிற்கு எதிராக தமிழர்களைப் பலப்படுத்திய ஒரு படையாகவும் அது தமிழ் நிலத்தில் இறங்கியது குறிப்பாகக் கிழக்கில் இந்தியப் படை இறக்கத்தோடு, இந்தியப்படையுடன் சேர்ந்து வந்த தமிழ் இயக்கங்கள் குடியேற்றவாதிகளான சிங்களவர்களையும், முன்பு தமிழர்களைத் தாக்கிய முஸ்லிம்களையும் பழிவாங்கலாயினர். இதனால் பல முஸ்லிம் கிராமங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டன. ஏற்கனவே பாகிஸ்தானுடனான மானசீகப் பிணைப்பின் காரணமாக இந்திய எதிர்ப்புணர்வுடனிருந்த முஸ்லிம்கள் மேற்படி சம்பவங்களோடு இந்தியப் படை மீதும், அதோடு சேர்ந்து வந்த இயக்கங்கள் மீதும் வெறுப்படைந்தார்கள். இந்த வெறுப்பு அவர்களை இந்தியப்படையை எதிர்த்துப் போராடிய புலிகளை நோக்கித் திருப்பியது. இதனால் இந்தியப்படை இங்கு நிலைகொண்டிருந்த காலங்களில் முஸ்லிம்கள் புலிகளை அதிகரித்த அளவில் ஆதரித்தார்கள். இந்தக் கட்டத்தில்தான் முஸ்லிம் கொங்கிரசின் அரசியற் பிரவேசம் நிகழ்ந்தது.

முஸ்லிம் கொங்கிரஸ் ஒரு மதரீதியான கட்சியாக இருந்தது பள்ளிவாசல்களை மையங்களாகக் கொண்டு அது தனது அரசியலை ஆரம்பித்தது. அவர்கள்கலந்து கொண்ட முதலாவது தேர்தல் மாகாண சபைத் தேர்தலாகும் தேர்தலில் நூறு வீதமும் இந்திய எதிர்ப்பையே தனது அரசியலாகக் கொண்டிருந்த முஸ்லிம் கொங்கிரஸ் தனது பிரசார மேடைகளில் இந்தியப் படை தமது பெண்களுக்கிழைத்த துன்பங்களைப்பற்றியும் தமது வணக்கத் தலங்கள் இழிவு செய்யப்பட்டமை பற்றியும் உணர்ச்சி வசப்பட்ட பிரசாரங்களைச் செய்தது. எனவே தேர்தலில் பெரு வெற்றி ஈட்டியது. அதோடு கிழக்கில் முஸ்லிம்களிற்கென மதத்தின் பெயரிலான முதலாவது பலம் மிகுந்த கட்சியொன்று உருவாகியது.

முஸ்லிம் கொங்கிரஸ் தமிழ் இயக்கங்களுடன் அநேகமாக ஒத்துப்போகவில்லை. தமிழ்த் தேசியத்துள் முஸ்லிம்கள் கரைந்து போய்விடுவர் என்று அது அஞ்சியது. தனது கட்சிக்காரர் சிலரை தமிழ்ப்போராளிகள் கொன்றுவிட்டதாக குற்றஞ்சாட்டியது. சிறுபான்மையுள் சிறுபான்மையாக வாழும் ஒரு சமூகத்தின் தலைமைக்கு இருக்க வேண்டிய முதிர்ச்சியை அது அநேகமாக நிருபிக்கவில்லை. அவ்வாறானதொரு நுட்பமான அரசியலில் தேர்ச்சி பெறுவதற்கு அவர்களுக்குக் கால அவகாசமும் இருக்கவில்லை அரசியலில் பிரவேசித்த மிகக் குறுகிய காலத்துள் மிகச்சிக்கலான உணர்ச்சி கரமான விவகாரங்களையிட்டு அது முடிவெடுக்கவேண்

(7ஆம் பக்கம் பார்க்க)

# சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டம் - ஒரு நோக்கு

1990 நவம்பரில் ஆரம்பிக்கப்பட்ட திருக்கோணமலை மாவட்டத் தொடர்பகம் என்ற அடித்தளம் 1992 ஜனவரியில் சமூக - பொருளாதார அபிவிருத்தித் திட்டமாக உருவாகியது. ஒடுக்குமுறை அரசு இயந்திரத்தில் அச்சுறுத்தல், இராணுவ நடவடிக்கை காரணமாக 1991 முதல் புலம் பெயர்ந்து முகாம்களிலுள்ள தென் தமிழ் ஈழம், முல்லைத்தீவு, மணலாறு, கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கும், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் கிராமங்களுக்கும் முக்கியமானதும், பொருத்தமானதுமான உதவித் திட்டத்தை அமுல்படுத்தல் இந்த மையத்தின் நோக்கமாகும். எனினும் இதன் பிரதான அம்சம் சமூக-பொருளாதார முன்னேற்றம்தான்.

''வறுமைக் கோட்டின் கீழ் பின்தங்கிய நிலையில் முன்னேற்றகரமற்ற நிலையில் உள்ள கிராமங்களையும், அக்கிராமங்களிலுள்ள மக்களையும் முன்னேற்றகரமான மேம்பாட்டு நிலைக்குக் கொண்டு வருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்'' என சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின் பொறுப்பாளர் ரவியுடன் உரையாடும் போது அவர் குறிப்பிட்டார்.

சமூக பொருளாதார அபிவிருத்தித்திட்டம் பல நிறுவன வடிவங்கள் ஊடாகச் செயற்படுகின்றது. கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, விவசாயம், புனர்வாழ்வு, தொழில் திட்டம் மற்றும் பொதுத்திட்டம் என்பன இந்த நிறுவன வடிவங்களாகும் இந்த நிறுவன வடிவங்களிடையே ஒற்றுமையும், இணைவும் உண்டு. இவ்வடிவங்களினதும் கூட்டு மொத்த அமைப்பாக இடம் பெயர்ந்தவர்களுக்கான கொத்தணிக் கிராமம், சமூக பொருளாதார நன்மைகள், பொதுவான மனிதநேய வேலைகள் மட்டுமல்ல அதற்குத் தேவையான சமூக நிலைமைகளையும் சமூக பொருளாதார முன்னேற்றத்தையும் அபிவிருத்தித்திட்டம் உறுதி செய்கிறது.

> **இடம் பெயர்ந்தவர்களுக்கும், வறுமைக் கோட்டின் கீழ் பின்தங்கிய நிலையிலுள்ள கிராமங்களுக்குத் தேவையான சமூக நிலைமைகளையும், சமூக-பொருளாதார முன்னேற்றத்தையும் சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டம் உறுதி செய்கிறது.**

## கல்வி

சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இடம் பெயர்ந்த மாணவர்களுக்கு வாழ்வின் ஆதாரமான கல்வி — பாலர் கல்வி, மாணவர் கல்வி, சர்வகலா பயிற்சி என்ற நிலைகளில் வழங்கப்படுகிறது. இடம் பெயர்ந்தவர்களுக்கான கல்விக் கூடங்கள் முல்லைத்தீவு, வன்னி யாழ். மாவட்டங்களில் சிறிலங்கா இராணுவத்தின் செயற்பாடுகள் இல்லாத இடங்களில் செயற்படுகின்றன. பாலர் பாடசாலைகள் அமைந்துள்ள இடங்களில் மாலை நேர வகுப்பாகக் கல்வி வளர்ச்சிக் கழகங்கள் ஆண்டு ஒன்று முதல் ஆண்டு பதின்மூன்று வரையுள்ளமாணவர்களைத் தயார் படுத்தும் மையங்களாக அமைகின்றன. கல்விக் கழகங்களில் மாலை வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் இடம்மாறிப் பாடசாலைகளில் சேர்ந்து முறை சார்ந்த கல்வியைப் பெறுகிறார்கள். ஒரே நேரத்தில் இடம் பெயர்ந்த சாராருக்கும், கிராமத்துப் பிள்ளைகளுக்கும் கல்வி வழங்குவதால் பாடசாலைகளில் உருவாகும் இடநெருக்கடி, ஆசிரியர் பற்றாக்குறை, உபகரண வசதிகள் பாதிப்பை ஏற்படுத்தாமல் விரிவான உதவிகளை சமூக பொருளாதார அபிவிருத்தித்திட்டம் வழங்குகிறது. பெரும்பாலும் பெற்றோரின் பொருளாதார தளம் பலவீனமானதால் சீருடை, பாடசாலை உபகரணங்கள், சத்துணவு (பால், பயறு, ஜீவாகாரம்) ஆகியன வழங்கப்படுகின்றன.

எமது கலாசாரப் பகைப் புலத்தில் பாடத்தோடு இணைந்த செயற்பாடுகளாக பேச்சுப் போட்டிகள், பத்திரிகை வாசித்தல், பொது அறிவுப் போட்டி, ஒன்று கூடல், கலை நிகழ்ச்சிகள், சர்வகலா பயிற்சி என்ற கற்கை நெறியின் கீழ் மாணவர்களின் மொத்த செயற்பாடுகள் உருவாகிறது.

## சுகாதாரம்

வயதுக் குழுவினரின் குணங்களையும், தேவைகளையும் கருத்திற்கொண்டு, உதவி தேவைப்படுவோரைப் பகுதிகளாகப் பிரித்து பாலர், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மாருக்கென போஷாக்குத்திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. பாலர்களுக்குப் பாடசாலைகளில் பால் வழங்கப்படுகிறது. மற்றவர்களுக்கு மாதமொருமுறை பால்மா மற்றும் சத்துணவு வகைகள் வழங்கப்படுகின்றன. சுகாதாரம் பேணுவது மக்களது வேலை. இந்த விஷயத்தில் மக்கள் சுயம்பாக இயங்கிப் பழக்கப்படுகிறார்கள்.

தென் தமிழ் ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்து வந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழும் மக்களுக்கென திருக்கோணமலை மாவட்டத் தொடர்பகத்தின் உதவியுடன் வைத்திய சேவைப் பிரிவு 1991 - ஜனவரி 14ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்டு உடையார் கட்டு மூங்கிலாறுப் பகுதியில் இயங்குகிறது. இதன் கிளை



நிறுவனமாக அசோக் வைத்திய நிலையம் முத்தையன் கட்டில் அமைந்துள்ளது.

நோய்வாய்ப்பட்டவர்களுக்கு முழுமையான சேவை இலவசமாகவழங்கப்படுகிறது. உணவு, மருந்து. தங்கும் வசதி எல்லாம் இலவசம், நடமாடும் வைத்தியசாலை சுழற்சிமுறையில் கிராமங்கள் தோறும் சென்று சேவையாற்றுகின்றது. அரசு சார்பற்ற மனித நேய ஸ்தாபனங்களும் சுகாதாரசேவையில் பங்குகொண்டு பயன்பொருத்தமாகத் தத்தம் உதவிகளை வழங்குகின்றன.

(6ஆம் பக்கம் பார்க்க)

**மதன்**

## விழுதுகள்..

களை உணர்த்துவது - திட்டமிட்ட செயற்பாடு எல்லாம் தனிப் பாணியாக இருந்தன. நாளடைவில் இவன் முல்லைத்திவு மாவட்ட மருத்துவக் குழுவிற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டான்

சிறிலங்காப் படைகளுடன் மீண்டும் போர் தொடங்கிய பின்னர் முல்லைத்தீவு முகாமை முற்றுகையிட்டு நிகழ்ந்த போர, மாங்குளம் இராணுவ முகாம் மீதான தாக்குதல் என்பனவற்றில் இவன் நித்திரையை மறந்து பணியாற்றினான் மிகக்குறைந்த அடிப்படை வசதிகளே இருந்தும்ஒரு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் உணர்வினை போராளிகளுக்கு ஏற்படுத்தினான்.

மருத்துவக் குழுவின் தேவை கருதி மீண்டும் தமிழகத்துக்கு பிரயாணம் மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது இவனுக்கு 10-01-1991 அன்று தமிழகத்திலிருந்து மருந்துப பொருட்களுடன் இவன் படகில் வந்து கொண்டிருந்தான் அட்டகைக் கண்ட சிறிலங்காக் கடற்படையினர் இவர்களைத்துரத்தினர்.படகு பத்திரமாக நெடுந்தீவுக் கரையை வந்தடைந்தது. அவசர அவசரமாக மருந்துப் பொருட்களை இறக்கினான். அவற்றைப்பவுத்திரப் படுத்தினான். அச்சமயத்தில் கடற்படையினர் இவர்களை நோக்கித் தாக்குதல் தொடுத்தனர் மாஸ்ரர் எதிர்த்தாக்குதல் தொடுத்தான்.பலபேரின் உயிர்களைக் காத்த மாஸ்ரரின் உயிரைக் காப்பாற்றுமளவுக்கு அன்றைய நிலைமை இருக்கவில்லை. இயற்கையோடு போராடி அழுது கொண்டிருக்கும் நெடுந்தீவு மக்கள் இவனுக்சாகவும் அழுதனர்.

1977 இல் கொழும்பிலிருந்து இடம் பெயர்ந்து வந்திருந்தாலும், 1983 இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டோரைக் கண்டிருந்தாலும். 1984 செப்ரம்பர் 1-ம் தேதி நடந்த சம்பவங்களே இவனை மிகவும் பாதித்திருந்தன. அன்று பருத்தித்துறை நவீன சந்தையிலுள்ள கடைகள் சிறிலங்கா பொலிஸ் படையினரால் தீக்கிரையாக்கப்பட்டன – காந்தி சிலை உடைக்கப்பட்டது. தாயக மண்ணிலேயே தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர் இவன் கல்வி கற்ற ஹாட்லிக் கல்லூரியே தீக்கிரையாக்கப்பட்டது. 3 பிரதான கட்டடங்கள் இரசாயன ஆய்வு கூடம் சுமார் 7500 க்கு மேற்பட்ட நூல்களைக் கொண்ட நூலகம் எல்லாமே தீக்கிரையாக்கப்பட்டன அப்போது சிறிலங்காவின் பொலிஸ் மா அதிபராக உருத்திரா ராஜசிங்கம் என்றதமிழரே இருந்தார். அவர் இதனை விசாரணை செய்யலாம் என சிறிலங்கா அரசு கூறியது.

விசாரணைகள், ஆணைக் குழுக்கள் பற்றிய செய்திகள் சிறீலங்காப் படையினரைப் பொறுத்தவரை கடலை சுற்றத் தான்பயன்படும். '977இல் இனக்கலவரம் பற்றிய சன்சோனி கமிஷன் 1979 இல் இன்பம், செல்வம் முதலானோரின் மரணம்பற்றி லலித் அத்துலத் முதலி தலைமையிலான தெரிவுக்குழு, 1981இல் யாழ்ப்பாண நூலகம், கூட்டணிக் காரியாலயம், ஈழநாடு காரியாலயம் போன்றவை தீக்கிரையாக்கப்பட்டது தொடர்பான லயனல் பெர்னாண்டோ தலைமையிலான கமிஷன், 1985 இல் திம்புப் பேச்சு வார்த்தை நடந்த சமயம் வவுனியாவில் சிறிலங்காப் படையினரால் நூற்றுக் கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டது பற்றி விசாரிக்க அமைக்கப்பட்ட பிரிகேடியர் மனோமடவல தலைமையிலான ஆணைக் குழு, கடந்த வருடம் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 'எம். எஸ். எவ் குழு' வினர் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் பற்றி அமைக்கப்பட்ட விசாரணைக் குழு, 91 ஜூன் 11 இல் கொக்கட்டிச் சோலையில் சிறிலங்காப் படையினரால் ஏற்படுத்தப்பட்ட மரணங்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழு மற்றும் இன்னோரன்ன கமிஷன்கள், விசாரணைகள் எல்லாம் முடிவில் சிறிலங்காப் படையினரின்கன்னத்தில் செல்லமாகக் கிள்ளினவேயொழிய வேறெதுவும் உருப்படியாக நடக்கவில்லை. ஆனால் கீறல் விழுந்த இசைத்தட்டுப் போல ஒரு விஷயத்தை மட்டுமே சொல்லின: ''இனிமேல் இந்த மாதிரிச் சம்பவம் நடக்காமல் பார்க்க வேண்டும்''.

சிறீலங்கா அரசு இவற்றை எப்படி நோக்குகின்றதோ - 1977 ஆம் ஆண்டுக் கலவரங்கள், 1984 ஆம் ஆண்டுச் சம்பவங்கள் ஒரு மாஸ்ரரை உருவாக்கியது போல, எம் மக்கள் மீதான படுகொலைகள் கமிஷன்களில் நம்பிக்கைவைக்காத புதிய ஒரு போராட்டப் பரம்பரையை உருவாக்குகின்றன. அந்தப் பரம்பரை சொல்லும் செய்தி ''இனிமேல் இப்படியான நிகழ்வுகள் நடக்காமலிருக்க - எமது இருப்பை உறுதி செய்யத்தான் இப் போராட்டம்''.

## அசுத்தமான...

வறுமையான மோசமான மண்வளங்களைக் கொண்ட விவசாயிகளுக்கு அவர்களுடைய உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக ஆராய்ச்சிகளைமேற்கொள்ள ஊக்குவிக்கப்பட வேண்டும்.

உணவு உற்பத்தியிலீடுபடுபவர்களான விவசாயிகளின் ஆரோக்கிய வாழ்வும் வாழ்க்கை வசதியும் உயர ஆவன செய்யப்படவேண்டும். உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கானஆராய்ச்சியும்உதவிகளும் வழங்கப்படும் அதேசமயம்சூழ் நிலை பாதிக்கப்படாமலும் கிருமிகள் அதிகரிக்காமலும் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உணவு உற்பத்தியின் பின்பு அவை களஞ்சியப் படுத்தப்படும் போதும், எடுத்துச் செல்லப் படும்போதும், விநியோகிக்கும் போதும் ஏற்படுகின்ற அனாவசியமான இழப்புக்களையும் பழுதடைவதையும் தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

சுத்தமான குடிநீர் அனைவருக்கும் போதுமானளவு கிடைப்பதற்கு போதுமானளவு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். இதனால் தொற்று நோய்களைப் பெருமளவில் கட்டுப்படுத்தலாம்.

MR. ARUNASALAM SIVAPATHASUNDARAM
*Second Memorial Lecture*
*( 991)*
**By**
*Prof* C.SIVAGNANASUNDARAM
MBBS*(Cey ),DPH(Lond )*
*Ph. D. (Lond )*
*on*
Socio Cultural Challinges
In Child Care
*will be held on*
*Tuesday 12 th may 1992*
*at3. 30 p.m in the*
*Kailasapathy Auditorium*
*University of Jaffna*
*All Are Welcome*
(சி/4379)

## சமூக பொருளா...

### வீடமைப்பு

கொத்தணி குடியிருப்புகளில் இடம்பெயர்ந்தவர்கள் இருப்பதற்கானதற்காலிகமான இருப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. குறுகிய காலத்தில் தயாரிக்கப்படவேண்டிய நிர்ப்பந்தத்தில் அமைந்த இந்த இருப்பிடங்கள் 10' x 12'விஸ்தீரணமும், குசினி 5' x 6'விஸ்தீரணமும் கொண்ட சராசரித் தன்மை வாய்ந்தவை குடியமர்த்தல் நிவாரணமாக சமையல் உபகரணம், அரிசி சீனி, மா அத்துடன் ஏனைய பொருள்களும் வழங்கப்படுகின்றன.

திட்டரீதியாக வீடுகள் அமைந்துள்ளன. தென் தமிழ் ஈழமக்களுக்கென 28 இடங்களில் அமைந்துள்ள 37 திட்டங்களில் 2287 வீடுகள் அமைந்துள்ளன. முல்லைத்தீவிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு எட்டுக் குடியிருப்புத் திட்டங்களில் 425க்கும் அதிகமான வீடுகள். வீடமைக்கும் பணி தொடர்ந்தும் நடைபெறுகிறது. குடியிருப்புகளில் தேவையான அடிப்படைத் தேவைகளும் வழங்கப்பட்டுள்ளன. குடியமர்ந்த மக்கள் எந்தவிதச் சலனமுமின்றி வாழ்கிறார்கள்.

### விவசாயம்

பொருத்தமான திட்டத்தின் அடிப்படையில் மேட்டுப் பயிர்ச் செய்கையும், நெற்செய்கையும் மேற்கொள்ளப்படுகின்றன, மேட்டுப் பயிர்ச் செய்கைநிலக்கடலை, கௌபி. பயறு, உளுந்து போன்ற தானியத்துறை சார்ந்தவை. தாழ்நிலங்களில் வேளாண்மைசெய்யப்படுகிறது மருந்து, விதை, உரம், உளவுப்பணம், கிருமிநாசினி, களைநாசினி அனைத்தும் மீள் அளிப்புக் கடன் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

உடையார்கட்டு-முத்தையன் கட்டுப் பகுதியில் கூட்டுப்பண்ணைத் திட்டம் நடைமுறையில் உள்ளது, சமூகரீதியான உற்பத்தியில் விவசாயிகள் ஈடுபடுகிறார்கள். பொதுவான தேவைகளின் அடிப்படையில்மரக்கறி, தானியவகைகள் பயிரிடப்படுகின்றன. மேலும் விவசாயிகள் நலன் கருதி மூங்கிலாறு அணைக்கட்டு வேலைத் திட்டம் 1992-ல் முடிக்கப்பட்டது. உடையார் கட்டுக் குளத்திலிருந்து செல்லும் பிரதான ஆற்றை மறித்து, மானாவாரிக் காணிகளுக்கு நீர்ப்பாசனம் செய்யப்படுகிறது. இதனால் 80 ஏக்கர் நிலத்தில் தொடர்ச்சியான பயிர்ச்செய்கை நடை பெறுகிறது 13 லட்சம் ரூபா நிகர வருமானம் கிடைத்துள்ளது,

### புனர் வாழ்வு

உதவி தேவைப்படுபவர்களுக்கு ஏற்ற விதமாக புனர் வாழ்வு உதவிகள் வழக்கப் படுகின்றன. மனித உழைப்புச் சக்தியை உருவாக்குவதற்கு தொழிலாளியின் குடும்பம் சீவிக்க வேண்டும். அந்தச் சீவனம் உதவியின்றிச் சாத்தியமாகாது. உலர் உணவு வகைகள் குடும்ப ரீதியாக வழக்கப்படுகின்றன. விதவைகள் அனாதைகள்நோயாளிகளுக்கு நிவாரண உதவிகள் தரப்படுகின்றன. பாலர் பாடசாலை ஆசிரியர்கள் கல்வி வளர்ச்சிக் கழக ஆசிரியர்கள், தொண்டர்களுக்கு உதவிவழங்கப்பட்டுஉழைப்புச்சக்தி உறுதி செய்யப்படுகிறது. பூப்பெய்தல், மகப்பேறு மற்றும் அவசர தேவைகளுக்கும் உதவி வழங்கி சமூக நிலைமைகளும் பேணக் படுகின்றன

### தொழில்திட்டம்

தொழில் முறை சுயசார்பு தொழில் திட்ட அம்சங்களைக் கொண்டது. ஆகமொத்தம் சிறு தொழில்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. மீளளிப்புக் கடன் முறையில் உதவி வழங்கப்படுகின்றது. குடும்பமொன்றுக்கு 2000 முதல் 2500 ரூபா வரை வழங்கப்படுகிறது. வியாபாரம், சிகை அலங்காரம், கால்நடை வளர்ப்பு, தேநீர்க்கடை, மீன்பிடி. கடையப்ப வியாபாரம் ஆகிய தொழில்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. சிறு மூலதனமாக துவிச்சக்கர வண்டி, தையல் இயந்திரங்களும் தேவை கருதி சிலருக்கு வழங்கப்பட்டுள்ளன.

### பொது விடயங்கள்

தென் தமிழ் ஈழ மக்களுக்கென 28 அறிவாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. முல்லை இடம் பெயர்ந்த மக்களுக்கு 2அறிவாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு, மேலும் அறிவாலயங்கள் அமைக்கப்படுகின்றன. பொது நூல் நிலையம் அமைக்கப்பட்டு சுழற்சி முறையில் நூல்கள் மன்ற நிலையங்களுக்கு வழங்கப்படுகின்றன.

பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு தையல், விளக்குமாறு செய்தல், பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி ஆகிய இன்னோரன்ன திறமைகளைக் கற்றுத்தரப்படுகின்றன. சுந்தரி பயிற்சி நிலையம் பயிற்சி நெறிகளை நெறிப்படுத்தும் ஒரு இணைப்பு மையமாகச் செயற்படுகிறது.

மக்கள் கடைகள் அமைக்கப்பட்டு நியாய விலையில் குடும்ப எண்ணிக்கைக்கு ஏற்பக் குடும்ப அட்டை முறையில் உணவு வகைகள் வழங்கப்படுகின்றன. தட்டுப்பாடான எல்லாச் சாமான்களையும் இக் கடைகளில் பெறக் கூடியதாக உள்ளது.

வீதி திருத்தல், மலசலகூடம் அமைத்தல் ஆகிய விடயங்களையும் குடியேற்ற வாசிகளே கவனிக்கிறார்கள்.

கலை நிகழ்ச்சிகள் குடியேற்றவாசிகள் மத்தியில் சமூக ஒத்திசைவை வளர்க்கின்றன. தேவகானம் இசைக்குழு, இசை, வில்லிசை நிகழ்ச்சிகளை நடத்துகின்றது போராட்ட மேகங்கள் என்ற வீடியோப் படம் இவர்களின் தயாரிப்பாகும். உறுதி நினைவு என்ற கையெழுத்துச் சஞ்சிகையும் வெளிவரவுள்ளது.

கடைசியாக, ஒன்றைச் சொல்லி முடிக்கலாம். 1992 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்ட சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின் ஏழு அம்சங்களும் மாவட்ட ரீதியாக விஸ்தரிக்கப்பட்டு பின்தங்கிய கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதற்கென யாழ் மாவட்டத்தில் 16 கிராமங்களும், மணலாறு மாவட்டத்தில் 5 கிராமங்களும், முல்லைத்தீவில் 27 கிராமங்களும், கிளிநொச்சியில் 35 கிராமங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

புதிய உயர் கல்லூரி
New College of High Studies
ஆரியகுளம் சந்தி, யாழ்.
A/L 92
DAY CLASSES
(PAPER)
ஆரம்பமாகிவிட்டன
A/L 94
புதிய பிரிவு
ஆரம்பம்: 9. 5. 92
A/L 92
சனி ஞாயிறு
PAPER CLASSES
ஆரம்பம்: 17. 5. 92
SPOKEN ENGLISH
BY BRITO
புதிய பிரிவு
ஆரம்பம்: 9. 5. 92
காலை 9.00 மணி
(கி-4366)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரப் பிறப்பு
03-01-1972

வீரச் சாவு
08-05-1989

### வீரவேங்கை ஜனா
### (யோகசுந்தரம் ஐங்கரன்)

எங்கள் உயிரின் உயிரே ஜனாகுஞ்சு நீ
எங்கே ஜனா போய்விட்டாய்?
பாரதத் துரோகிகளிடம் உன்னைப் பறிகொடுத்து
பரிதவித்து நிற்கின்றோம் ஜனா!
எங்கள் வாழ்வின் ஒளி விளக்கான உன்னை
இழந்து இருள் மண்டிக் கிடக்கின்றோம் ஜனா!
பதின் ஏழு ஆண்டுகளில், இம்மண்ணில் உன் வாழ்வு
சுருங்கியது விதிவசமோ? சோகம் தாளாமல்
பெரும் விழி நீரால், பூமியே சேறாக
பெருமகனே உன் நினைவை
போற்றுகின்றோம் நாம் என்றும்
மாவீரர் குடும்பம் என்ற மறக்குலப் பெயர் தந்தாய்
ஜனா நீஇறக்கவில்லை இன்றும் ஆயிரமாய்
வளர்கின்றாய்!
நீ கொண்ட இலட்சியப்பாதை ஒரு நாள்
நிறைவேறும் ஜனா!
உன் கல்லறை மலர நாம் கண்ணீர் சிந்துகின்றோம்.
கணந்தோறும் உன் நினைவால்
கலங்கி வாடும்

'யோகஸ்தான்'
அளவெட்டி.

அப்பா, அம்மா,
பெரியண்ணா, மாலாக்கா
சின்னண்ணா.
(2534)

# இனப்பிரச்சினை; கண்ணுக் கெட்டிய தூரத்தில் அரசியல் தீர்வு தெரிவதாக இல்லை

இலங்கையில் பல வருடங்களாக நீடித்துவரும் இனப்பிரச்சினைக்கு அண்மையில் ஓர் சமாதான ரீதியான அரசியல் தீர்வு ஏற்படுவதற்கான சாத்தியப்பாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. பலசமாதான நல்லெண்ணக் குழுக்கள் பலமான முயற்சிகளை மேற்கொண்ட போதும் இறுதியாக பிரதான சிங்களக்கட்சிகள் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிராக ஒருமித்து செயற்படுவதென எடுத்துள்ள தீர்மானமானது, அரசியற் தீர்வு குறித்து அரைகுறையாக இருந்த நம்பிக்கைகளையும், இழக்கச் செய்து விட்டது என்றே கூறலாம்.

சிங்களவர்களில் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியற் தீர்வு ஏற்பட வேண்டுமானால், அதில், தமிழ் மக்களின் தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை என்பன அடங்கி இருக்க வேண்டும் எனத் தமிழர்கள் கோருகின்றனர். இதன் மூலமே தமிழ் மக்கள் பாதுகாப்புடனும், கௌரவத்துடனும் வாழலாம் என எதிர்பார்க்கின்றனர். தமிழ்மக்களின் இக் கோரிக்கை 1984 திம்பு மாநாட்டில் இருந்து தொடர்ச்சியாக வற்புறுத்தப் பட்டு வந்துள்ளது.

அண்மைக்காலத்தில் பல நல்லெண்ணச் சமாதான தூதுக்குழுக்கள் வடபகுதிக்கு வந்து திரும்பியுள்ளன. இதில் கத்தோலிக்க (கிறிஸ்தவ) நல்லெண்ணக் குழுக்களும் அடங்கும். இதேவேளை கடந்த மாத இறுதியில் யாழ்ப்பாணம் வந்துதிரும்பிய பௌத்த நல்லெண்ணத்தூதுக்குழுவின் விஜயம் குறிப்பிடத்தக்க அரசியல் முக்கிய நிகழ்வாக கருதப்பட்டது. ஏனெனில் தமிழர் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்துவந்த பௌத்த குருமார்களின் அமைப்பொன்று விஜயம் செய்ததினாலாகும்.

> வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பிற்கு எதிராக பிரதான சிங்களக் கட்சிகள் ஒருங்கிணைந்து செயற்படுவதென்பது தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வை மிக தொலைவிற்கு துரத்தியுள்ளது. இது வரை சமாதான நல்லெண்ண முயற்சிகளை மேற் கொண்ட அனைவரதும் நேரத்தையும் வீண் விரய மாக்கியுள்ளது.

இதேவேளை, யாழ். வந்த பௌத்த பிக்குகள் இனப்பிரச்சினை தீர்வுக்கென ஓர் சமாதானத் திட்டம் ஒன்றையும் கொண்டுவந்தனர். அவர்கள் கொண்டுவந்த சமாதான திட்டத்திற்கும் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கும் இடையில் பாரிய இடைவெளிகள் இருந்தன. இதனால் இத்திட்டம் விடுதலைப் புலிகளால் நிராகரிக்கப்பட்டது. ஆனால், தமது தீர்வுத்திட்டம் நிராகரிக்கப் பட்ட போதும் யாழ் வந்த பௌத்த பிக்குகள் தமது நல்லெண்ண முயற்சிகள் தொடரும் புதிய தீர்வுத் திட்டத்துடன் மீண்டும் யாழ். வருவோம் எனத் தெரிவித்துவிட்டுச் சென்றனர்.

இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு காணப்படுவதற்கு எப்பெ முதும் எதிர்ப்புத் தெரிவித்துவரும், பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகளின் எதிர்ப்பும் இப்பௌத்த நல்லெண்ணத் தூதுக் குழுவுக்கும் இருந்தது. யாழ். வந்தபௌத்த பிக்குகளுக்கு விடுதலைப் புலிகள் அளித்த வரவேற்பு நிகழ்ச்சியில் பேசிய, அக்குழுவின்செயலாளரான வண. பண்டிற மாதம்பகம அசாசிதேரோ, ''இத்தூதுக்குழுபலமிரட்டல்களுக்கும், எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் வந்துள்ளதாகவும் பௌத்த பீடங்களின் (அஸ்கிரிய, மல்வத்த) மகாநாயக்கர் கூட தமதுவிஜயத்தை விரும்பவில்லை'' எனவும்தெரிவித்தார்

ஆனால், இப் பௌத்த குருமார்களின் யாழ். விஜயத்திற்கு சிறிலங்கா அரசாங்கத்தின் ஆதரவு எந்தளவிற்கு இருந்தது என்பது கேள்விக்குரிய தொன்றாகவே உள்ளது. ஆனால், இப் பௌத்த பிக்குகளின் யாழ். விஜயத்தை சிறிலங்கா இராணுவத்தரப்பு விரும்பவில்லை என்பது அதைத் தொடர்ந்து இடம்பெற்ற பல சம்பவங்கள் தெளிவு படுத்துவதாக இருந்தது.

பௌத்தபிக்குகள் யாழ். வருவதற்கு இரு தினங்களுக்கு முன்னர், சிறிலங்காகடற்படை தமிழ் மீனவர்கள் மீது, பெரியதொரு தாக்குதலை நடத்தியது. எட்டு மீன்பிடிப்படகுகளில் இருந்த சுமார் முப்பது பேரை கடலில்தூக்கி வீசியது. படகுகளை மூழ்கடித்தது. இது சமாதான முயற்சிகளுக்கு முதல் விடுத்த எச்சரிக்கையாக இருந்தது.

அடுத்ததாக பௌத்த பிக்குகள் யாழ்ப்பாணத்தில் பேச்சு நடத்திக் கொண்டிருக்கையில் தேச விரோதக்கும்பல்களின் துணையுடன் கொம்படிப் பாதையில் பாரிய குண்டுத் தாக்குதல்ஒன்றை நடத்தியது. இதில் சுமார் 12 அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர். 20 பேருக்குமேல் காயமடைந்தனர்.

மூன்றாவதாக கொம்படி குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றதற்கு அடுத்த நாள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்புடன், காங்கேசன்துறைராணுவ முகாமிற்குச் சென்று கொண்டிருந்த வாகனத்தொடர் அணி மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதலை நடத்தினர்.

இராணுவத்தினரின் இந்நடவடிக்கைகள் இராணுவத்தரப்பினர் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று ஏற்படுவதை விரும்பவில்லை என்பதை தெளிவாக வலியுறுத்தும் அம்சமாக இருந்தது.

இந்நிலையில் சிறிலங்கா அரசியலில் இன்று பலம்பொருந்திய அரசியல்சக்தியாக மாறிவிட்ட இராணுவத்தை புறந்தள்ளி விட்டு அரசியல் தீர்வொன்றை எட்டி விடமுடியாது என்பதும் வெளிப்படை.

இதேவேளை கொழும்பிலுள்ள விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இன்று இராணுவத்தினருக்கும், ஜனாதிபதி பிரேமதாசாவிற்கும் இடையில் உள்ள உறவைவிட பௌத்த பீடத்திற்கும், இராணுவத்தினருக்கும் இடையில் உள்ள உறவு பலமானதாகவுள்ளது என்று. இந்நிலையில் அரசாங்கத்தின் கருத்து எந்த நிலையில் இருந்தாலும் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பது என்பது நெருக்கடி நிறைந்ததொன்றாகவே உள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் வந்து சென்ற பௌத்த பிக்குக்கள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி நல்லதொரு முடிவுடன் மீண்டும் யாழ்ப்பாணம் செல்லவுள்ளதாக அறிவித்துள்ளனர். ஆனால், இவர்களின் முயற்சி எந்தளவிற்கு வெற்றி பெறும் என்பது பெரும் கேள்விக்குரியதாகவே உள்ளது.

பௌத்த பிக்குகளின் முதல் விஜயத்தின் போது அரசாங்கத்தின் நிலைப்பாடு,

> பலம் பொருந்திய இராணுவத்தினதும், பௌத்த பேரினவாத சக்திகளினதும் எதிர்ப்பினால் மட்டுமல்ல அரசியல் கட்சிகளுக்குள் தலைமைகளுக்கு எதிராக எழுந்துள்ள உணர்வுகளும் குற்றச்சாட்டுகளும் வடக்கு-கிழக்கு இணைப்பு குறித்து பெரிய சிங்களக் கட்சிகள் சிந்திக்க அஞ்சுகின்றன.

ஓரளவேனும் பிக்குகளுக்கு உற்சாகம் ஊட்டியிருக்கலாம். ஆனால், தற்போதைய நிலைப்பாடும் சமாதானமுயற்சிகளை மேலும்சிதறடிப்பதாகவுள்ளது

அரசாங்கத்தால் இனப்பிரச்சினைக்கு தீர்வுத்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கென உருவாக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு பெரும் இழுபறி நிலையில் உள்ளது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவில், அங்கம் வகிக்கும், தமிழ்க்குழுக்கள் வடக்கு - கிழக்கு இணைப்பு பற்றிக் கோருகின்றன ஆனால், பலம் பொருந்திய சிங்களக்கட்சிகள் எவையும் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் எதையும் முன்வைக்கவில்லை. ஆனால் ஆளும்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியும், எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மற்றும் மக்கள் ஐக்கிய முன்னணி என்று மூன்று கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்ப்பதென்ற முடிவு, பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபார்சில் வடக்குக் கிழக்கு இணைப்பிற்கு சாத்தியப்பாடு எதுவும் இல்லை என்பதை உணர்த்தப் போதுமானதாகும்.

இனப்பிரச்சினைத் தீர்விற்கு வடக்கு கிழக்கு இணைப்பு ஏதோ ஒரு வகையில் இடம்பெற்றாக வேண்டும்என அரசாங்கக் கட்சியும், எதிர்க் கட்சிகளும் முன்னர் சிந்தித்ததாகஅரசியல் வட்டாரங்களில் புலமாகப் பேசப்பட்டது. ஆனால்தற்பொழுதுதிடீரென வடக்கு -கிழக்கு இணைப்பை எதிர்ப்பதென்ற அரசாங்கக் கட்சியினதும் எதிர்க்கட்சியினதும் முடிவு இக்கட்சிகள் எதிர் நோக்கும் நெருக்கடிகளையே காட்டுகின்றன. அரசியலில் இராணுவத்தினரின் கை ஓங்கியுள்ளமை ஒரு புறம் இருக்க கடந்த காலத் தேர்தல்களின்போது இக்கட்சிகள் இருந்தது போன்று தற்பொழுது பலமாக இல்லை. கட்சிக்குள் தலைமைத்துவப் போட்டிகளும், தலைமைகள் மீதான குற்றச்சாட்டுக்களும் இக்கட்சிகளைப் பலவீனப்படுத்தியுள்ளன. இதன் காரணமாகக் கட்சித் தலைமைகளும் அச்சம் அடைந்துள்ளன.

இந் நிலையில், பலம்பொருந்திய இராணுவமும் பௌத்த பேரினவாத சக்திகளும் இணைந்து எதிர்க்கும் வடக்கு கிழக்கு இணைப்பைப் பற்றி சிந்திக்க அரசியற் கட்சிகள் அஞ்சுகின்றன இதனால், இராணுவத்திடமும், பேரினவாத கட்சிகளிடமும் இவ் அரசியல் கட்சிகள் சரணடைந்துள்ளன.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு என்பது இப்போதைக்குச் சாத்தியப்படக் கூடியதொன்றாகத் தெரியவில்லை. தமிழரின் தாயகம் துண்டாடப்படுவதையோ அன்றி சிதைக்கப்படுவதையோ தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும் ஏற்பார்கள் என்பதற்கில்லை.

**- ஜெயராஜ்**

---

## முஸ்லிம்களின்

டியிருந்தது எனவே அது எடுத்த முடிவுகள் பெரும்பாலும் அவசரமானவைமுதிர்ச்சிகுறைந்தவை.

திடீரென்று ஒரு நாள் முஸ்லிம் கொங்கிரஸ் தலைவர் இந்தியப்படையின் பிரசன்னத்தை ஆதரித்துப் பேசலானார் இதற்குக்காரணம் முஸ்லிம் கொங்கிரஸ் தலைவர்மறைமுகமாக அச்சுறுத்தப்பட்டமை தான் என்று கூறப்படுகிறது. அம்பாறையில் அவரது வாகனம் இந்தியச்சார்பு இயக்கங்கள் என்று சந்தேகிக்கப்படும் ஆயுதபாணிகளால்பின்தொடரப்பட்டது எனவே அவர் இந்தியாவுடன் இணக்கத்திற்கு வந்தார் என்றும் அதன் பொருட்டு இந்திய அரசு அவரிற்கு நிதி உதவி செய்தது என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன அக்கரைப் பற்றிலுள்ள உப்புக்கரைச்சியில் 200 முஸ்லிம் இளைஞர்கள் இந்தியர்களிடம் பயிற்சி பெற்றதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறே இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமான போதும் முஸ்லிம் கொங்கிரஸ் இலங்கை அரசை ஆதரித்தது இதனால் முஸ்லிம்களிற்கு ஏற்படப்போகும் பயங்கரமான பின்விளைவுகளைக் குறித்து அது தீர்க்கதரிசனத்துடன் சிந்திக்கவில்லை.

கிழக்கில் பள்ளிவாசல்களில் புலிகளுக்கு எதிரான பிரசாரங்கள் ஆரம்பமாயின. புலிகள் தங்களோடிருந்த முஸ்லிம் இளைஞர்களைப் பொறுத்த வரை அவர்கள் தமது மத வழிபாடுகளைப்பின்பற்றுவதில் எதுவித கட்டுப்பாட்டையும் விதித்திருக்கவில்லை. எனவே பள்ளிவாசல்களுக்குப் போன முஸ்லிம் இளைஞர்கள் அங்கு புலிகளுக்கு எதிரான போதனைகளைக் கேட்டார்கள். அவர்கள் அங்கு சமூகத்திலிருந்து விலக்கப்பட்டவர்களைப் போல நடத்தப்பட்டார்கள். அவர்களை ஆயுதங்களோடு ஓடிவருமாறு போதிக்கப்பட்டது. இதையடுத்து 20 க்கும் மேற்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதங்களோடு தமது சமூகத்தை நோக்கி ஓடிப் போயினர். புலிகளின் கிராமிய அமைப்புக்களிலிருந்த பலமுஸ்லிம்கள் திடீரென்று தமது சமூகத்தோடுசேர்ந்துகொண்டு ராணுவத்தைஆதரித்தார்கள். தமிழர்கள் இதைச்சிறிதும் எதிர்பார்க்கவில்லை. முஸ்லிம்கள் தங்களை ஏமாற்றிவிட்டதாகவே அவர்கள் இப்பொழுதும் நம்புகிறார்கள்.

இந்தியப் படையுடனான வெறுப்புணர்வே முஸ்லிம்களை புலிகளை நோக்கித் தள்ளியது. திடீரென்று அதிகரித்த முஸ்லிம்களின் ஆதரவு (இந்தியப்படை விலகிய பின் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமானபோது) திடீரென்று இல்லாது போயிற்று. இந்தவகையில், இந்திய இலங்கை உடன்படிக்கையின் நேரடித்தொடர் விளைவே இன்றுள்ள நிலைமை எனலாம். இத்தனைக்கும் இரண்டாவது ஈழப்போரின் துவக்கப்பொறி என வர்ணிக்கப்படும் சம்பவம், ஒரு முஸ்லிம் தையல்காரர் சம்பந்தப்பட்டதே என்பது அவலமானதொரு முரண்தான்.

இன்று முஸ்லிம்கள் வடக்கிலிருந்து அகதிகளாக வெளியேறி விட்டார்கள். கிழக்கில் அவர்களுக்குப் பாதுகாப்பில்லை. அங்கு அவர்கள் நூறு வீதமும் இராணுவத்தின்பாதுகாப்பில் தங்கி வாழ வேண்டியுள்ளது. இவ்வாறு இராணுவத்துடன் நிபந்தனையின்றிய தங்கும்நிலைக்குள் தள்ளப்பட்டதால் முஸ்லிம்கள் இலங்கை அரசுடனான தமது பேரம் பேசும் சக்தியை அநேகமாக இழந்துவிட்டார்கள்எனலாம். இதை முஸ்லிம் கொங்கிரஸ் அரசியலின் மிக மோசமான தோல்வி என்றே கூற வேண்டும்.

தமிழர்களின் தாயகத்தைச் சிதைக்கும் முயற்சியில் இலங்கை அரசு முக்கியமாகமூன்று உபாயங்களைக் கொண்டுள்ளது. முதலாவது திட்டமிட்ட குடியேற்றங்கள். இரண்டாவது வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் மணலாற்றில் நிரந்தரமான ஒரு இராணுவ வேலியைப் போடுவது. மூன்றாவது கிழக்கில் தமிழர் நிலத்தைப் பங்கு போடும் விதத்தில் முஸ்லிம்களையும் தமிழர்களையும் நிரந்தரமான பகைவர்களாக்குவது மணலாறில், கிழக்கிற்கான புலிகளின் விநியோகப் பாதைகளில் தாக்கமுள்ள இடைஞ்சல்களை ஏற்படுத்த இன்றுவரை இராணுவத்தால் முடியவில்லை. ஆனால், கிழக்கில் முஸ்லிம்களையும் தமிழரையும் நிரந்தரப் பகைவராக்குவதில் இலங்கை அரசு கணிசமான அளவு தாரம் முன்னேறியுள்ளது என்பதும் உண்மை.

இன்று கிழக்கில் நடப்பவற்றை இலங்கை அரசு திருப்தியோடு பார்த்துக்கொண்டிருக்கிறது. ஆனால் நீண்டகாலப் போக்கில் இலங்கை அரசு முஸ்லிம்களைக் கைவிடாது என்பதற்கு எத்தகைய உத்தரவாதங்களும் கிடையாது. சிலசமயம் விவாதத்திற்காக கிழக்கில் தமிழர்கள் முறியடிக்கப்படுவார்கள் என்று வைத்துக் கொண்டால் அப்போது முஸ்லிம்களை இலங்கையரசு கைவிடப்போகிறது, அல்லது தமிழர்கள் தமது இறுதி இலக்காகிய தனியரசை நோக்கி முன்னேறும் போதும் முஸ்லிம்கள் கைவிடப்படுவார்கள். அல்லது சிலசமயம் தமிழர்கள் தற்காலிக தீர்வெதையும் பரிசீலிக்கச் சம்மதித்தாலும் கூட, அப்போதும் முஸ்லிம்களுக்கு எத்தகைய தீர்வைத் தருவது? முக்கியமாக, முஸ்லிம்களுக்கும் தீர்வு காணப்படவேண்டும் என்பதே, சமாதானத்திற்கான பிரதான தடைகளில் ஒன்றாகவும் இருக்கப் போகிறது.

---

## உதிரம்

செங்கலடியில மணியத்தார் வீடு, குடியிருப்பில் ஆறுமுகத்தார்வீடு அங்கினையும்விசாரிச்சுப் பாருங்கோ. சிலவேளை போயிருப்பா என்றார் ஒருவித உறுதியுடன்.

ஓமண்ணை நாங்கள்போட்டுவாரம்...ரவுண்ட்சுகள் மற்றதுகள் காணுமே ... அரும் பொட்டாய் கொண்டுபோட்டு பிறகு தடுதாளிப் படாதைங்கோ! வேணு அண்ணை மேலும் கூறினார்.

அண்ணை நீங்கள் முகத்தை கழுவிச் சாப்பிடுங்கோ... அரியன் போட்டுவரட்டுக்கும் என வீட்டுக்குள்ளிருந் தவயதான பெண்ணொருத்தி குரல் கொடுத்தாள்.

நாங்கள் போட்டுவாறம் ... என்று கூறியபடி காந்தனும் பிரசாந்தும் வேகமாக நடக்க ஆரம்பித்தனர்.

கறுத்தப் பாலத்திற்கு சமீபமாகச்சென்று அன்று சம்பவம் நடைபெற்றதாக செல்லக்கண்டு அண்ணை குறிப்பிட்ட இலுக்குப்புல்லுநிறைந்தபகுதியெல்லாம்சல்லடைபோட்டுத் தேடினர். நிலத்தை நன்குஉற்றுப்பார்த்துதடய பொருட்கள் ஏதும்கிடைக்காதோ என ஏங்கிக் கொண்டிருந்த வேளையில் பெண்களுக்கானகைப்பை யொன்று அனாதரவாக வீசப்பட்டுக்கிடப்பது தெரிந்தது. ஓடிச் சென்று அதனை எடுத்த பிரசாந் பிரித்துப் பார்த்தான் அதற்குள் அவள்போட்டிருந்த (P)என்ற எழுத்துக் கிடந்தது. தன்னையும் மறந்தவனாக அக்காவுட காண்ட்பாக் என்று கத்தினான் அதனைவாங்கிபார்த்த காந்தன் இரதத்தின் நெடில் வீசுகிறது... ஆகவே அக்காவுக்கு கடுமையான காயம் பட்டிருக்க வேணும் போல எனக் கூறிக்கொண்டு அதேதிசையில மேலும் முன்னேறித் தேடினர் கா கா. எனக்கத்தியபடி காகங்கள் சிலபறப்பதும் பின்னர் மரக்கிளையில் வந்து அமருவதுமாக இருந்ததைஅவதானித்

(2ஆம் பக்கம் பார்க்க)


# இந்திய நீர்மூழ்கிகளை அமெரிக்கா வேவு பார்ப்பு

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்திய நீர்மூழ்கிக் கப்பல்களை அமெரிக்க நீர் மூழ்கி எதிர்ப்பு விமானங்கள் வேவு பார்த்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் இந்தியா கவலையடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியநீர்மூழ்கிக்கப்பலைச் சுற்றிலும் அமெரிக்க நீர்மூழ்கி எதிர்ப்பு விமானம் 'சோணா போயா' என்றமிதப்புகளைப் போட்டுள்ளது இந்த மிதப்புகளில் பொருத்தப்பட்டிருக்கும் கருவி நீர் மூழ்கியிலிருக்கும் மின்னியல் கருவிகளைப் பற்றிய தரவுகளை எடுத்துச் சமிஞ்சை செய்யக்கூடியது.

இதனை ஒரு சிநேக பூர்வமற்ற செயல் என இந்தியா கருதுகிறது,

ஆனால் அமெரிக்க அரசு இந்தச்சம்பவம் குறித்து உடன் கவலை தெரிவித்துள்ளது.




மலையக மக்கள் முன்னணி தலைவர்

# சந்திரசேகரன் கைது சட்டவிரோதம் என தீர்ப்பு

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரனை கைது செய்து தடுத்து வைத்தது சட்டவிரோதம் என்று உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன் முன்னணியின் உப தலைவர் வடிவேல் தர்மலிங்கம், செயலாளர் பாவா அப்துல் காதர் ஆகியோர் கைதானமையும் தடுத்து வைப்பும் சட்ட விரோதமானது தான் என்றும் உயர் நீதி மன்றம் கூறியுள்ளது

இவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டுமெனக்கோரி தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுவுடன் இணைந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கிலேயே நீதியரசர்கள் மார்க் பெர்னாண்டோ, கே. எம். எம். பி. குலதுங்க, எஸ். பி. டபிள்யூ வடுகொடபிட்டிய ஆகியோர் இந்த தீர்ப்பை வழங்கினர்.

இந்த மூவரையும் இந்த மாதம் 18 ஆம் திகதி கண்டி மேல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும் என்றும் இந்தக் குற்றப் பத்திரிகை கையளிக்கப்படும் பட்சத்தில் யாருடைய பாதுகாவலில் அவர்கள் வைக்கப்படவேண்டும் என்பதை கண்டி மேல் நீதிமன்றமே முடிவு செய்ய வேண்டும் என்றும் கையளிக்கப்படாத பட்சத்தில் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்றும் நீதியரசர்கள் தமது தீர்ப்பில் மேலும் தெரிவித்தார்கள்.

இந்த மனுக்களை சந்திரசேகரன் மனைவி சரோஜினி, தர்மலிங்கம் மனைவி சவுந்திரிப்பிள்ளை, காதர் மனைவி சக்கியா உம்மா ஆகியோர் சட்டத்தரணி அப்புத்துரை விநாயகமூர்த்தியூடாக தனித்தனியாக தாக்கல் செய்திருந்தனர்.

## இணைறய உதைப்பந்தாட்டப் போட்டி

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், பிரிவுரீதியகத்தெரிவு செய்யப்பட்ட ஆறு கழகங்களுக்கிடையிலான லீக் முறையிலான இரண்டாவது சுற்றுப் போட்டியில் 'இன்று குருநகர் பாடும் மீன், விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது, இன்று பிற்பகல் 3 30 மணிக்கு யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெறவுள்ளது.

## இந்திய

கொழும்பிலுள்ள தனது தூதுவர் மூலம் தனது ஆட்சேபத்தைத் தெரிவித்ததுடன் இந்தக் கூற்றுக்கள் குறித்து விளக்கமும் கோரியிருந்தது

இது தொடர்பாகப் பதில் அறிக்கை ஒன்றை வெளியிட்ட சிறிலங்கா வெளிவிவகார அமைச்சு, ''சிறிலங்காவின் உள் விவகாரங்களில் வெளிச் சக்திகள் தலையிடுவதைச் சிறிலங்கா அரசு ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை. சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் நிலைப்பாடு இதுவே'' என விளக்கியிருந்தது.

மேலும் இவ்வறிக்கையில், இந்திய - இலங்கை உடன்படிக்கை ஏற்பட வேண்டிய சூழ்நிலைகள், அதன்பின் இலங்கையில் இந்தியப் படைகளின் பிரசன்னத்துக்கு வழிவகுத்த சம்பவங்கள் யாவும் நாடறிந்த உண்மையாகும். இதனை இங்கு மீளச் சொல்லவேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை மாலை 2-00 மணியளவில் யாழ். சங்கரப்பிள்ளை கட்டடத்தில் அமைந்திருக்கும் மேற்படி சங்க அலுவலகத்தில் நடைபெறும். இக் கூட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி சங்கத்தின் தலைவர் திரு. சிவபாதம் கேட்டுள்ளார்.

## சீமெந்து

அடிப்படையில் சேவையிலிருந்து ஒய்வு பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை இயங்குவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது

## தாயகம்

உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. ஆனால் அரசு வழங்கும் நிவாரணப் பணத்தில் கூட்டுறவுச்சங்கம்வழங்கும்பழுதடைந்த உணவுப் பொருள்களை கொள்வனவு செய்யும்படி வற்புறுத்தப் படுகிறது.

## இராணுவத்திற்கு

களை கட்டிப்பிடித்து அழுது புலம்பினர். தமது மகனின் உடலை புலிகளிடம் கதைத்து மீட்டுத்தரும்படியும் கேட்டனர். இறந்த இராணுவத்தின் பெற்றோர்கள் இராணுவத்தின் தடைமுகாம்களையும்தாண்டிபுலிகளிடம்வரமுயற்சித்த வேளை இராணுவம் தடுத்து நிறுத்தியது

கடந்த ஐந்தாம் திகதி அதிகாலை வவுனியா சிறிலங்கா இராணுவ கண்காணிப்பு அரண் மீதான புலிகளின் அதிரடித் தாக்குதலின்போதுகொல்லப்பட்ட இராணுவத்தின் சடலங்கள் சிலவற்றை இராணுவம் மீட்டெடுக்கவில்லையாம்

விடுதலைப்புலிகளின் இந்தத் தாக்குதலின்போது கொல்லப்பட்ட இராணுவத்தின் சடலங்களில் ஒன்றைப் புலிகள்மீட்டு பறநட்டகல்பகுதியில் பார்வைக்கு வைத்தனர் என்பதுகுறிப்பிடத்தக்கது.

வேறு இரு இராணுவச் சிப்பாய்களின் சடலங்கள் தாக்குதல் இடம்பெற்ற பகுதியின் அருகாமையிலுள்ள ஆறு ஒன்றில் கைவிடப்பட்டதாகக் கூறப்பட்டது. (தி)

## திருமலை

பலம் (வயது 40, மல்லிகைத் தீவு) ஆகியோரை கைது செய்துள்ளனர்.

## நீர்கொழும்பில்

மார்கள் கொண்டு வரப்பட்டார்கள் என்பது குறித்து பொலிசார் புலன் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும்,

மகரகம குண்டு வெடிப்புச் சம்பவத்தின் போது பழைய கில்மன் கார் ஒன்றே பயன்படுத்தப்பட்டது. என்றும் இந்த வகையில் இந்தக் கார் குறித்து சந்தேகம் எழுந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

## முஸ்லிம்

ஏழரை மணியிலிருந்து ஒன்பதரை மணிவரை தமது நரவேட்டையை நடத்தியதுடன் கிராமத்தை முற்றாகச் சூறையாடி எரியூட்டியும் உள்ளனர் இவர்களால் சுமித்திரா (19) தவராணி (20), தவமலர் (18), தங்கமலர் (19), குவேந்திரா (35) ஆகியோர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களுடன் மொத்தம் 50 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 28 பேர் காயமடைந்துள்ளனர். ஆறு பேர் காணாமல் போயுள்ளனர். இவ்வாறு கொல்லப்பட்டுள்ளவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒன்பது பேரும் அடங்குவர்.

இதே வேளை 293 குடும்பங்கள் வாழ்ந்த கரப்பொல கிராமத்தில் 32வீடுகள் எரிக்கப்பட்டதுடன் அம்மன் கோவில் உடைக்கப்பட்டு நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட பின் எரிக்கப்பட்டுள்ளது. சாரதா

## 70 பொலிஸ்

தம் 70 பேரைக் காணவில்லை என பொலிஸ் ஆளனிப் பிரிவு தெரியப்படுத்தியுள்ளது.

இந்த 70 பேரில் 67 பேர் சாதாரண பொலிசார், 2 பேர் ஏ.எஸ் பி. தரத்தைச் சேர்ந்தவர்கள், ஒருவர் சிரேஷ்ட இன்ஸ்பெக்டர் என்று அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தேவி (16) சிவரமணி (18) சிவரூபி (28) இம்மூன்று பெண்களையும் வெலிகந்த பொலிஸில் ஊர்காவல் படையினராக கடமையாற்றும் செயின் எனப்படுபவரும் அவரது குழுவினரும் சேர்ந்து பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியபின் வெட்டிக் கொலை செய்ததாக மறைந்திருந்து பார்த்த உறவினர் கூறுகின்றனர்.

இச்சம்பவங்களின் போது பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் புகமுற்பட்ட பொதுமக்களை பொலிசார் கட்டிவைத்து தாக்கியதுடன் சுட்டுத் துரத்தியுள்ளனர். இப்பகுதியில் 35 பேர் சுட்டும் வெட்டியும் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப் பட்டும் கொலை செய்துள்ளதுடன் 53 பேர்படுகாயமடைந்தனர்.

இப் படுகொலைகள் தொடர்பாகத் தமக்கு பூரணபாதுகாப்புத் தரப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட ஊர்காவல் படையினரை தம்மால் அடையாளம் காட்ட முடியும் என இதில் தப்பிய மக்கள் கூறுகின்றனர்.


# சன்மார்க்கசபை

குரும்பசிட்டி

சன்மார்க்கசபைத் தலைவரும், வடமாநில சித்திர பாடப் பிரதி கல்விப் பணிப்பாளரும், கலாகேசரி கலாலய இயக்குனரும், சித்திர சிற்பக் கலைஞருமான

கலாகேசரி,

ஆ. தம்பித்துரையின்

# மணிவிழா



இடம்:- கம்பன் கோட்டம், நல்லூர்

காலம்:- 9. 5. 1992 சனிக்கிழமை காலை 9. 00மணி

தலைமை: கலைப்பேரரசு. ஏ. ரி. பொன்னுத்துரை

மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பரமேஸ்வரா முன்னாள் அதிபர் எஸ். சிவபாதசுந்தரம், கலாநிதி சி. க. சிற்றம்பலம், இரா. சுந்தரலிங்கம், ஆ. மகாலிங்கம், செம்பியன் செல்வன், கலாநிதி சோ. கிருஸ்ணராசா ஆகியோர் வாழ்த்துரை வழங்கி உரையாற்றுவர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க. விஸ்வநாதன்
பிரசார செயலாளர்

(2539)


# மரண அறிவித்தல்

## இராமசாமி செல்லமுத்து

கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருவையாறு 3 ஆம் பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான இராமசாமி செல்லமுத்து காலமானார். இவர் இராமசாமியின் அன்பு மனைவியும், நாகேந்திரராசா, அருணகிரிநாதன் [செல்லப்பா] (பிரான்ஸ்), புனிதவதி (ஜேர்மன்), செல்வராணி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலசரஸ்வதி, விக்னேஸ்வரன் (ஜேர்மன்), ஜெயச்சந்திரன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பார்த்திபன், பத்மகௌரி, பிரசன்னா, பிரவின்குமார் ஆகியோரின் பேர்த்தியுமாவார். இறுதிக் கிரியைகள் 7 - 5 - 92 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு திருவையாற்றில் நடைபெற்றது. உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

இல. 109/3
திருவையாறு
கிளிநொச்சி

தகவல்:
இ. நாகேந்திரராசா
(மகன்)

(சி. 2546)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992ஆம் ஆண்டு மே மாதம் 8ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.